பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 31, புதன்கிழமை 16.08.2017 கதிர் 283

குறைந்த செலவில் குடும்பமாக கனடாவில் குடியேற...
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

முதல்வர் - பொலிஸார் சந்திப்பில் தகவல்:

## ஜேர்மனில் இருந்து ஒருவர் ஆவா குழுவுக்கு உதவியாம்!

(எஸ்.நிதர்ஷன்)

"யாழ்.மாவட்டத்தில் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழு உறுப்பினர்கள் பலர் ஒரு மாதகாலத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் வாள்வெட்டுச் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் குறைவடைந்திருக்கின்றன.

பக்கம் 18

### வாள்வெட்டுச் சம்பவங்கள் இங்கு குறைந்திருக்கின்றன எனத் திருப்தி



## பொலிஸில் தமிழ் இளைஞர்களை இணையக் கோருகிறார் முதல்வர்!

474 வெற்றிடங்களுக்கு இருவர் மட்டுமே விண்ணப்பிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக.16

தமிழ்ப் பொலிஸாரின் தேவை அதிகம் உள்ள நிலையில் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ளத் தயக்கம் காட்டி வருகின்றனர் என்பதை விசனத்துடன் சுட்டிக் காட்டியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், தமிழ் இளைஞர்களைப் பொலிஸ் சேவையில் இணைய வருமாறு அழைப்பும் விடுத்தார்.

474 வெற்றிடங்களுக்கு ஆக மூன்று இளைஞர்கள் மட்டுமே விண்ணப்பித்திருக்கின்றனர் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நேற்று பொலிஸ் அதிகாரிகளுடன் தாம் நடத்திய சந்திப்பின் பின்னரே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்தப் பொலிஸ் சந்திப்பில் தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில்

பக்கம் 18

### சத்தியலிங்கம், டெனீஸ் கருத்துக்கு பதில் கூற முதலமைச்சர் பின்னடிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மீன்பிடி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் சென்றால் அதற்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனே பொறுப்பேற்க வேண்டும் என சுகாதார மற்றும் மீன்பிடி அமைச்சர்கள் கூறிய கருத்து தொடர்பாக முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டபோது பதில்

பக்கம் 18

## கேப்பாபிலவுக் காணிகளை படையிடமிருந்து விடுவிக்க சர்வதேச அழுத்தத்தைக் கோருகின்றார் சம்பந்தன்!



கொழும்பு, ஓக.16

கேப்பாபிலவில் படையினரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு சர்வதேச இராஜதந்திரிகளின் அழுத்தத்தைக் கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தன் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம், அதற்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுதிய பதில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எழுதிய பதில், அவற்றுக்கு சம்பந்தன் எழுதிய பதில் கடிதம் ஆகியவற்றை எல்லாம் ஒன்றாகத் தொகுத்து, அவற்றுடன் ஓர் இணைப்புக் குறிப்பையும் சேர்த்து, இராஜதந்திரிகளுக்குச் சம்பந்தனின் சார்பில் அனுப்பி வைத்திருக்கின்றார் சம்பந்தனின் ஊடகச்

பக்கம் 18

### வெளிவிவகார அமைச்சர் மாரப்பன



புதிய வெளிவிவகார அமைச்சராக முன்னாள் சட்டமா அதிபர் திலக் மாரப்பன நேற்று ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

## ஆளுநர் மூலம் எம்மை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கையே முன்னெடுக்கப்படுகிறது

இந்திய சுதந்திர தினக் கூட்டத்தில் முதல்வர் வேதனை உரை


யாழ்ப்பாணம், ஓக.16

அதிக அதிகாரங்களை நாங்கள் கோரியபோது - அழுத்தங்களைப் பிரயோகித்தபோது - ஆளுநர் என ஒருவரைத் தலைமை அலுவலராக நியமித்து, சகல நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தக் கூடிய மேலதிக அதிகாரங்களை அவருக்கு வழங்கி, அவரின் நெறிப்படுத்தலின் கீழ் எம்மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வாழ வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு வேதனை,

பக்கம் 18

அளப்பு அருணாசலம்



பக்கத்து நாட்டுக்கு பக்குவமாய்ச் சொல்லப் பாக்கிறார் ஐயா...!

## டெனீஸ்வரன் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ரெலோ தலைமைக் குழுக் கூட்டம் சனியன்று

அதில் பங்குபற்றுவதற்கு அவருக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.16

ரெலோ கட்சி விடுத்துள்ள வழிகாட்டல்படி தமது மாகாண அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்வதற்கு அதன் உறுப்பினரான வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் மறுத்துள்ள நிலையில் - அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை குறித்து ஆராய்வதற்காக ரெலோவின் தலைமைக் குழு வரும் சனியன்று வவுனியாவில்

பக்கம் 18

## குருநகர் கடலில் மின்னல் தாக்கி மீனவர் பலி

யாழ்ப்பாணம், ஓக.16

குருநகர் கடலில் நேற்று அதிகாலை மின்னல் தாக்கி மீனவர் ஒருவர் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் குருநகர் தண்ணீர்த் தொட்டிப் பகுதியைச் சேர்ந்த பற்றிக் நிரஞ்சன் (வயது - 28)

பக்கம் 18

## துன்னாலைக் குழப்பங்களின் பிரதான சூத்திரதாரி கைதாம்!

வடமராட்சி, ஓக.16

துன்னாலைப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட குழப்பநிலைமைக்குக் காரணமான குழுவின் தலைவர் என்று கருதப்படும் ஒருவரை நேற்று அதிகாலை இரண்டு மணியளவில் கைதுசெய்துள்ளனர் எனப் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்கம் 18

## அரசுக்கு எதிராக ஒரு வாரம் தொடர்ச்சியாகப் போராட்டம்

மஹிந்த அணி ஏற்பாடு; நாளை ஆரம்பம்

கொழும்பு, ஓக.16

அரசாங்கத்திற்கு எதிராக ஒரு வாரத்துக்கு தொடர்ச்சியாகப் போராட்டத்தை நடத்துவதற்கு மஹிந்த அணி தீர்மானித்துள்ளது. இந்தப் போராட்டம் நாளை வியாழக்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளது.

அரசின் செயற்பாடுகளால்

பக்கம் 18

## ஷிராந்தியும் மகன் ரோஹிதவும் நேற்று பொலிஸ் விசாரணையில்!

மற்றொரு மகனிடம் இன்று விசாரணை



கொழும்பு, ஓக.16

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ விடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று 4 மணிநேரம் விசாரணை நடத்தினர்.

'சிரிலிய சவிய' அரசசார்பற்ற அமைப்புக்கு வழங்கப்பட்ட டிபென்டர் வாகனம் றக்பி வீரர் வசீம் தாஜுதீனின்

பக்கம் 18

## கிளிநொச்சியில் 38 ஏக்கர் காணி விடுவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில், இராணுவத்தினர் வசமிருந்த 38 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான ஆவணங்களை இராணு

பக்கம் 18

# ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு ஆதரவாகத் திரண்டனர் மக்கள்; குற்றப்புலனாய்வு பிரிவுக்கு முன்னால் பொலிஸார் குவிப்பு!






கொழும்பு, ஓக. 16

வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்கு குற்றப்புலனாய்வு பிரிவில் முன்னிலையான ஷிரந்தி ராஜபக்ஷ வுக்கு ஆதரவாகப் பொதுமக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு முன்னால் திரண்ட மக்கள் பல கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'எமக்கு மஹிந்த அரசு வேண்டும்', 'எமது தாய் மீண்டும் திரும்பி வரவேண்டும்', போன்ற கோஷங்களை எழுப்பி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பிரபல ரக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக ஷிரந்தி ராஜபக்ஷ நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியிருந்தார். இவருடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அங்கு சென்றிருந்தார்.

இதனால், இந்தப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டனர் அத்தடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மஹிந்தவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷவும் நேற்று நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## நயினை - நல்லூர் திருத்தல பஜனை பாதயாத்திரை நாளை ஆரம்பம்



நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவையொட்டி ஆண்டுதோறும் நடைபெற்று வரும் நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை, நாளை வியாழக்கிழமை, நயினை நாக பூஷணி அம்பாள் ஆலயத்தின் அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

53 ஆவது ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தப் பாதயாத்திரை -

நாளை ஆரம்பமாகும் பாத யாத்திரை குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம் வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தை வந்தடையும். திருத்தேரின் பின் பஜனைவேல் அர்ச்சனையுடன் யாத்திரை நிறைவு பெறும்.

பாத யாத்திரைக் குழுவினர் நாளை வியாழன் இரவு புங்குடுதீவு மடத்துவெளி முருகன் ஆலயத்திலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு மண்கும்பான் விநாயகர் ஆலயத்திலும், சனிக்கிழமை இரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும் தங்கிச் செல்வர்.

திருத்தலப் பஜனை பாத யாத்திரையில் கலந்துகொள்ளும் ஆண், பெண் இருசாரரும் சைவ கலாசாரத்துக்கு அமைய உடை அணிந்து வர வேண்டும் என்றும் பெண்கள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் யாத்திரை ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)




யாழ்ப்பாணம், ஒக.16

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் வயலின் சோலோ

வயலின் : சு. கோபிதாஸ், துவாரகி சுரேஷ்குமார். மிருதங்கம்:வி.ரமணா, கடம் : கே.ரவிசங்கர், கெஞ்சிரா: நா.சிவசுந்தர சர்மா, முகர்சிங்: சி.செந்தூரன்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவநெறி சன்மார்க்கர் இ.மகேஸ்ராஜ் ''பெரிய புராணத்தின் பெருமை' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

## நாடகத் திருவிழாவில் மூன்று நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத்திரு விழா' எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும். இதில் தே.தேவானந்தின் ''பசுவும் புலியும்'' (சிறுவர் நாடகம்) இன்று புதன்கிழமை இரவு 7 மணிமுதல் 7.45 மணி வரையும், மாயச் சங்கு (சிறுவர் நாடகம்) இரவு 7.50 மணி முதல் 8.20 மணி வரையும், ''ஏகாந்தம்'' (இசை நாடகம்) இரவு 8.30 முதல் 8.45 மணி வரையும் இடம்பெறவுள்ளன. (இ)

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஒக.16

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்கி வருகிறார்.

இன்றைய தலைப்பு: 'சகிப்புத் தன்மை ?'

## கொழும்பில் சனியன்று அரச புகைப்பட விழா

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இலங்கை அரச புகைப்படவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கையின் புகழ் பூத்த ஓவியர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அண்மையில் தேசிய ரீதியில் இடம்பெற்ற புகைப்படப் போட்டியில் வெற்றி பெற்றவர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

## கொக்குவில் வாள்வெட்டு தொடர்பில் மற்றோர் இளைஞன் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று குற்றச்சாட்டில், ஆவா குழுவின் உறுப்பினர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

19 வயதுடைய தருஷன் என்ற இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். கொக்குவில் பகுதியில் நேற்றுக் காலை சிறப்பு அதிரடிப்படையினரால், இவர் கைது செய்யப்பட்டார்.

கொக்குவிலில் கடந்த மாதம் 30 ஆம் திகதி பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலுடன் இவர் தொடர்புபட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே இந்த இளைஞன் கைது செய்யப் பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுகிறது. (க)

# நடந்து சென்ற வயோதிப மாதுவின் கழுத்தில் இருந்த சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப்புளியடிச் சந்திக்கு அருகாமையில் கனகசபை அவெனியூவில் நேற்று மாலை 6.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அந்த ஒழுங்கையில் நடந்து வந்து கொண்டிருந்த வயோதிபமாது ஒருவரின் கழுத்தில் இருந்த சுமார் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியைத் துணிகரமாக அறுத்துச் சென்றனர்.

சம்பந்தப்பட்ட கொள்ளைக் கோஷ்டியினரின் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டில் ஒரு பகுதி, அப்பிரதேச மக்களினால் குறித்து கொள்ளப்பட்டுள்ளது.

அந்த மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகட்டில் முன்னால் இருந்த ஆங்கில எழுத்துக்களை அடையாளம் காணாத அவர்கள், இறுதியில் '3391' என்ற இலக்கங்கள் இலக்கத் தகட்டில் இடம் பெற்றிருந்தன என அடையாளம் கண்டுள்ளனர். (உ)

# ட்ரம்ப் - மைத்திரி நேரில் சந்திப்பர்? இலங்கை விடயம் குறித்தும் ஆராய்வர்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி அமெரிக்கா செல்லவுள்ளார். அங்கு செப்ரெம்பர் 12 முதல் 25 வரை நடைபெறவுள்ள அந்தக் கூட்டத்தில் 19 ஆம் திகதி ஜனாதிபதி கலந்து கொள்வார். அதன் பின்னரே ட்ரம்பைச் சந்தித்து உரையாடுவார். (ம)

## ஆளுநர்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் சுதந்திரத்தைத் தொடர்ந்து 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தது. ஆனால் ஒரு சில வருடங்களுக்கு உள்ளேயே சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே தோன்றிய கருத்து வேறுபாடு, முரண்பாடுகள், மோதல்கள் இன்னும் தொடர்ந்தவண்ணமே உள்ளன. பெரும்பான்மையினர் என்ற உரித்தை ஆங்கிலேயர் காலத்தில் பெற்றவர்கள், தமது ஆட்சி உரித்துக்கு மற்றைய இனத்தவர் அனைவரும் அடிபணிய வேண்டும் என்ற அவர்களின் எண்ணமே இம் முரண்பாடுகளுக்கும், மோதல்களுக்கும் காரணமாக இருந்து வந்துள்ளது.

காலத்திற்குக் காலம் அம் மோதல்கள் தணிந்திருக்கின்ற நிலை வந்த போதும், அதன் பாதிப்புக்களை முழுமையாக உணர்பவர்கள் அல்லது அனுபவிப்பவர்கள் தமிழ் மக்களாகவே இருந்து வருகின்றனர்.

இந்தியநாட்டின்தலையீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ்ப் பேசும் மக்களுக்கான கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட போதும் சிங்கள மக்களை சமாதானஞ் செய்யும் நோக்கில் மாகாண சபை அரசமைப்பு முறையானது அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இதனால் எமக்கெனத் தரப்பட வேண்டிய உரிமைகள், உரித்துக்கள் மறைப்பட்டு விட்டன. இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கைக்குள் தம்மைத் தாமே ஆளக்கூடிய அதிகாரங்களுடன் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் ஆகியவற்றைப் பகிர்ந்து தருமாறு அழுத்தங்களைப் பிரயோகித்த போதும் ஆளுநர் என்றஒருஅலுவலரைதலைமை அலுவலராக நியமித்து சகல நடவடிக்கைகளையும் கட்டுப் படுத்தக்கூடிய மேலதிக அதிகாரங்களை அவருக்கு வழங்கி அவரின் நெறிப்படுத்தலின் கீழ் எம்மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக வாழ வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் போரின் முடிவுக்குப் பின்னர் ஒரு தமிழ் மகனைவடமாகாணஆளுநராக ஆக்க வேண்டும் என்று பல நிறுவனங்களாலும் அமைப்புக்களாலும் கோரிக்கை விடப்பட்டது. அதனை அவ்வாட்சியாளர்கள் நிராகரித்தார்கள். தெற்கத்தைய மாகாணங்களுக்கு ஒரு தமிழரை நியமிக்கலாம். ஆனால் வடமாகாணத்திற்கு நியமிக்கக் கூடாது என்ற கெட்டியான தீர்மானம் ஒன்று அவர்களால் எடுக்கப்பட்டது. அந்தத் தீர்மானமே இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எமது மக்கள் பேரினவாதத்தால் துரத்தியடிக்கப்பட்ட போது எமது மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து எமது தலைவர்களை அங்கீகரித்து நாம் இந்த நாட்டிலே - சமாதான - பிரஜைகளாக - வாழ வேண்டும் என்பதற்காக தொடர்ந்து வந்த இந்திய அரசுகள் எடுத்த நடவடிக்கைகக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாங்கள் சம உரிமை உடையவர்களாக, எமது தாயகப் பிரதேசத்தில் எமது விடயங்களை நாங்களே கையாளக்கூடியவர்களாக, சுய மரியாதையுடன் வாழ்வதற்குத் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்தப் போராட்டத்துக்கு இந்தியா என்றும் துணை நிற்கும் என்ற வலுவான நம்பிக்கை எமக்குண்டு.

உண்மையில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் கொண்டு வந்தபோது பாரதத்தின் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துஉரித்துக்களையும் வடகிழக்கு மாகாணங்கள் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் 1987 ஆம் ஆண்டில் கருத்தாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தெற்கு அரசியல்வாதிகளின் பேரினவாதம் அதற்குத் தடையாக நின்றது. இன்றும் நிற்கின்றது. 'இந்நாடு ஓர் இன மக்களுக்கே உரியது. மற்றைய இனங்கள் அந்தப் பெரும்பான்மை இனத்தவர்களைச் சுற்றிப் பயணிக்கின்ற கொடிகளாகவே இருக்க வேண்டும்.'-என்றஎண்ணம்இருக்கும் வரையில் முரண்பாடுகள் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

அரசியல் எம்மை ஆழ்கடலுக்குள் அமுக்கி விட்டுள்ளது. இந்தியா சுதாகரித்துக் கொண்டு முன்னேறுகின்றது. நாங்களோ எதிர்பார்ப்புகளில் காலம் கடத்தி வருகின்றோம். இந்திய நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாடு எம்மையும் பீடிக்க வேண்டும். அப்பொழுதுதான் எமக்கு விமோசனம் உண்டு. - என்றார் முதல்வர்.

# அமைச்சர் ஒருவரை பதவி நீக்க சட்டத்தை மீறுவாரா முதல்வர்?

## டெனீஸ் அமைச்சு விடுத்த அறிக்கையில் கேள்வி

யாழ்ப்பாணம், ஓக.16

மாகாண சபை அமைச்சர் ஒருவரைப் பதவி விலக்குவது தொடர்பான விடயங்களை ஒட்டி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளவடக்குமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின்அமைச்சுஅந்தஅறிக்கையில் 'சட்டத்தை மீறுவாரா முதலமைச்சர்?' - என்று கேள்வியும் எழுப்பியிருக்கின்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு: -

கடந்த சில மாதங்களாக வடமாகாண சபையில் நிலவி வரும் அசாதாரண அரசியல் சூழ்நிலை எமது மக்களின் சாதாரண இயல்பு வாழ்க்கையைப் பாதிப்படையச் செய்துள்ளதோடு எதிர்கால அபிவிருத்திகளையும் வெகுவாக பாதிக்கும்.

ஒரு மாகாண சபையை சரியாக கொண்டு இயக்குவதற்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் மாகாண சபைகள் சட்டமுமே அச்சாணிகளாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் மேற்படி இரு சட்டங்களிலும் காணப்படுகின்ற சில முக்கிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டியவையாகும்.

மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற ஒருவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கமுடியும். அந்த வகையில் எமது தற்போதைய முதலமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். அவ்வாறு நியமிக்கப்பட்ட முதலமைச்சர் தனக்கு விரும்பிய நான்குஅமைச்சர்களைமாகாண சபை உறுப்பினர்களிருந்து தெரிவுசெய்து அவர்களை அமைச்சுப் பொறுப்புக்கு நியமிக்குமாறு சிபாரிசு செய்து ஆளுநருக்கு அனுப்பி வைக்கவும் முடியும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் பொழுது ஆளுநரும் அதற்குரிய சத்தியப்பிரமா ணங்கள் ஊடாக அந்த நபர்களை அமைச்சர்களாக நியமிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

இங்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட அமைச்சர் அவர்கள் தனது அமைச்சுப்பொறுப்பைஎந்தெந்த சந்தர்ப்பங்களில் வறி தாக்க முடியும் என்பது தொடர்பில் திட்டவட்டமானதும், தெளிவானதுமான ஏற்பாடுகள் இல்லை. எனினும், இயற்கை நீதி, முதலமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கான ஒழுங்குகள் வகுப்பட முடியும். அதன்படி -

1. குறித்த அமைச்சர் தனது சுயவிருப்பின் பேரில் அமைச்சுப் பதவியை ராஜினாமா கடிதத்தின் ஊடக வறிதாக்க முடியும்.

2. குறித்த தேர்தலில் அவர் போட்டியிட்ட கட்சியானது சம்பந்தப்பட்ட அமைச்சரின் அடிப்படை மாகாணசபை உறுப்புரிமையை இரத்து செய்கின்ற சந்தர்ப்பத்திலும் அவ்வமைச்சுப் பதவி வறிதாக்கப்படும்.

இது தவிர்ந்து,

3. முதலமைச்சர் குறித்த அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்குவதாயின், தகுந்த நியாயமான காரணங்களோடு மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவோடு தனது சிபார்சை ஆளுநருக்கு அனுப்பி வைக்கின்ற சந்தர்ப்பத்தில் ஆளுநர் அக் கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறான ஏற்பாடுகளே தற்பொழுது இருக்கின்ற அரசமைப்பு ரீதியாகவும், மாகாண சபைகள் சட்டத்தின் ஊடாகவும் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளாக இருக்கின்றன.

வடமாகாண போக்குவரத்து அமைச்சர் தனது பக்கமுள்ள நியாயங்களை எண்பிப்பதற்காகவும், நடக்கின்ற சில சட்ட முரணான அநீதியான செயல்களைத் தட்டிக்கேட்கவேண்டும் என்பதற்காகவும் தனது சுய விருப்பில் இராஜினாமாச் செய்யப்போவதில்லை என்னும் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். வேண்டுமென்றால் முதலமைச்சர் தன்னைப் பதவியில் இருந்து நீக்குமாறும் அவர் வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

மறுபுறத்தில் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் போக்குவரத்து அமைச்சரை கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து நீக்குகிறார் என தேர் தல் ஆணையத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைக்கின்றசந்தர்ப்பத்தில் அவரது பதவியானது வறிதாக்கப்படும். அவ்வாறு தமிழரசுக்கட்சியினர் அந்த நிலைப்பாட்டை எடுப்பார்களா? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

இவை இரண்டும் சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் தகுந்த நியாயமான காரணத்தைக் காட்டி, மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று அமைச்சர்களைப் பதவியில் இருந்து நீக்குவாரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆகவே, இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நீதியரசராகிய முதலமைச்சர் நடக்கப்போகின் றாரா? அல்லது சட்ட முரணாக செயற்படப் போகின் றாரா? என்று பொறுத்திருந்து அவதானிக்க வேண்டியிருக்கின்றது.

அதேநேரம் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வடமாகாண சபையில் முதலமைச்சரின் செயற்பாட்டில் அதிருப்தியுற்றவர்கள் அவரை நீக்குமாறு ஆளுநரிடம் சென்றபோது, ஆளுநர் அவர்களும் முதலமைச்சரை நீக்குவதென்று சொன்னால் தகுந்த காரணங்களோடு மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்குமாறும் கோரியிருந்தார்.

அவ்வாறானதொரு சூழ்நிலையே தற்பொழுது இங்கு அமைச்சர்கள் நீக்கும் விடயத்திலும் காணப்படுகின்றது, இதற்கு அப்பால் அக்காலப்பகுதியில் ஒரு சிலரினால் முதலமைச்சரை பின்கதவால் அனுப்புவதற்கு தென்பகுதி சிங்கள ஆளுநரோடு சிலர் கைகோத்துள்ளர்கள் என்ற பாரிய குற்றச்சாட்டும் முன் வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது முதலமைச்சர் இத்த கையதொரு இக்கட்டான சூழ் நிலையில், சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக செய்யப்போகின் றாரா? அல்லது ஆளுநரின் காலில் மண்டியிடப் போகின்றாரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆகவே தற்போதுள்ள இவ் அரசியல் அசாதாரண சூழ்நிலைகளை நீக்குவதற்கு முதலமைச்சர் சரியாக, நேர்த்தியாக சிந்தித்து, ஏனைய சுயநலத்தோடு வருகின்றவர்கள் மட்டில் விழிப்பாக இருந்து, எமது மாகாண சபையை வினைத்திறனாக கொண்டு நடத்துவதற்கு இங்கு காணப்படும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் புத்தி சாதுரியமானதாகவும் சட்டத்துக்கு அமைவாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடாத வகையில் வெளிப்படையாகவும் எவ்வாறு கையாள்வார் என்பதில் தான் எதிர்கால வடமாகாண சபையின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மக்களின் அபிவிருத்தியும் தங்கியுள்ளன.

அரசமைப்பின் 13 ஆம் திருத்த சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டம் தொடர்பான மேலதிக பல ஏற்பாடுகள் அவ்வப்போது அமைச்சரினால் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சம்பந்தனின் நம்பிக்கை தகர்கிறதா?

இந்த நல்லாட்சி அரசை ஆட்சிக் கட்டில் ஏற்றிய விடயத்தில் தமிழர்களின் பங்களிப்பு கணிசமானது. அதுவும் தமிழ் மக்களின் இப்போதைய தலைவராக உயர்ந்து நிற்கும் சம்பந்தன் ஐயாவின் பங்களிப்பும் சாணக்கியமும் மிக முக்கியமானவை.

இந்த ஜனாதிபதியையும், அதைத் தொடர்ந்து தற்போதைய நல்லாட்சி அரசையும் ஆட்சிக் கட்டில் - அதிகாரத்தில் - அமர்த்தி விட்டு அத்தரப்புகளுக்கு எதிரான பிரதான பாத்திரமான எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் வியூகம் அமைத்து தனது கைகளுக்குள் வளைத்து வைத்தபடி, கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் இத்தரப்புகளை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் காபந்து பண்ணுபவராகவே சம்பந்தன் நடந்து கொண்டார்.

தமது பொறுமை மூலம் - சகிப்புத் தன்மை மூலம் - ஏதோ ஒன்றை சாதித்து விடுவதற்காக பல விடயங்களில் விட்டுக் கொடுத்தார்; அமைதி பேணினார்; எதிர்க்கட்சித் தலைவராக சீறாமல், அரசுத் தரப்புத் தலைவர் போல ஆலோசனைகள் கூறி வழிப்படுத்தவும் முயன்றார். ஆனால், இப்போது அவர் பொறுமையின் - சகிப்புத் தன்மையின் - எல்லைக்கே வந்துவிட்டார் போல் தெரிகின்றது.

கேப்பாபிலவில் தமது பூர்வீகக் காணிகளை மீட்பதற்காக கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாகப் போராடி வரும் தமது மக்களின் உள்ளத்து உணர்வுகளை சம்பந்தன் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார். அந்த மக்களை அங்கு நேரில் சென்றும், அவர்களின் பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைத்தும் அவர் மனம் விட்டுப் பேசியுள்ளார். அந்த மக்களின் போராட்டத்தின் நியாயங்களையும், அந்தக் காணிகளை அரசுப் படைகள் உடனடியாகவே அவர்களிடம் கையளித்து விட்டு வெளியேற வேண்டிய கடப்பாட்டையும் அவர் தெளிவாகப் புரிந்தும் உணர்ந்தும் கொண்டுள்ளார்.

அதனால்தான் இந்த விடயத்தில் அதிகாரிகளுடனும், படைத் தளபதிகளுடனும் அரசுப் பக்க அரசியல்வாதிகளுடனும், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி போன்றோருடனும் சளைக்காமல் தொடர்பாடல் பேணி, சந்திப்புக்களை நடத்தி, கடிதங்களை அனுப்பி, நேரடியாகச் சந்தித்துப் பேசி, விவகாரத்தை வலியுறுத்தி, விடயத்தை நகர்த்த முயன்று வந்தார். தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பிரதான அடிப்படை யான நல்லிணக்கம், இந்தக் காணி விடுவிப்புடன் எழுச்சி பெறும் என அவர் எதிர்பார்த்தார். ஆனால், அவை எவையும் நடக்கவில்லை. நல்லி ணக்கத்தை வீழ்ச்சித் திசைக்குத் தள்ளும் சமிக்ஞைகளையே கொழும்பு அரசு அவருக்கு இப்போது தனது பதிலாகக் கோடி காட்டி நிற்கின்றது.

கேப்பாபிலவு காணி மீளளிப்பு விடயத்தில் தமது அதீத ஈடுபாட்டையும், பங்களிப்பையும், அந்தக் காணிகளை அதன் உரிமையாளர்களிடம் விரைந்து கையளிக்க வேண்டியதன் நியாயப்பாட்டையும், கடப்பாட்டையும் அரசுத் தலைமை புரிந்து கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்ற அவரது நம்பிக்கை பொய்த்து வருகின்றமையை அவர் நேரடியாகவே உணரத் தொடங்கியுள்ளார். இனிமேலும் இந்த விடயத்தில் ஜனாதிபதியையும், பிரதமரையும் அவரது அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் நம்புவதில் பயனில்லை, அப்படி நம்பினால் தமிழர்கள் நிலை நடு வீதியில்தான் என்று சம்பந்தனே எண்ணும் அளவுக்கு நிலைமை சென்று விட்டது போலும்.

அதனால் தான் கேப்பாபிலவு காணிகள் மீட்பு விடயத்தை அரசுடனும், அரசுத் தரப்பு அதிகாரிகளுடனும், படையினருடனும் கையாளும் தமது முன்னைய தந்திரோபாயத்தைக் கைவிட்டு, அதனை நேரடியாக சர்வதேச சமூகத்திடமும், அதன் இராஜதந்திரிகளிடமும் எடுத்துச் செல்வதற்கு அவர் தீர்மானித்திருக்கின்றார்.

கேப்பாபிலவு காணி விவகாரத்தை ஒட்டி தமக்கும் அரசுத் தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற கருத்து மற்றும் கடிதப் பரிமாற்றங்களின் விவரங்களை விலாவாரியாக வரிசைப்படுத்தி மேற்குலக தூதரகங்கள், ஐ.நா. பொதுச்செயலாளர், ஐ.நா. அமைப்புகள் என சர்வதேச சமூகத் தரப்புகளுக்கு தமது கடிதம் ஒன்றுடன் சேர்த்து அனுப்பி வைத்திருக்கின்றார் சம்பந்தன். அதில் இந்தக் காணி மீளளிப்பு நல்லிணக்கத்துக்கு அவசியம் என்பதால் அதில் சர்வதேசத் தரப்புகளின் அழுத்தத்தைத் தாம் எதிர்பார்க்கின்றார் என்றும் அவர் குறிப் பிட்டிருக்கின்றார்.

ஆக, நல்லாட்சி அரசுடன் நாம் நேரடியாகப் பேசித் தீர்த்து விவகாரங்களை ஒப்பேற்றுவது சாத்தியமற்றது என்ற எல்லையை சம்பந்தன் எட்டி விட்டார் என்பதே இதன் அர்த்தம்.

ஏற்கனவே, நல்லாட்சி அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் தீர்மானத்தை எடுக்க வேண்டிய இக்கட்டு நிலைமைக்கு கூட்டமைப்பு வந்து விட்டது என்ற செய்திகள் வெளியாகியிருந்தன. அத்தகைய நெருக்கடியை - அழுத்தத்தை - கொடுப்பதற்கு புதிய வழிமுறைகளையும் தந்திரோபாயங்களையும் கூட்டமைப்பு வகுக்க வேண்டியிருக்கும் என அண்மைக்காலமாகச் சுட்டிக் காட்டப்பட்டும் வந்தது.

அந்த வகையில், சர்வதேச இராஜதந்திர நெருக்குவாரத்தை ஏற்படுத்துவதை ஒரு முறையாக சம்பந்தன் பயன்படுத்த விழைகிறார்.

'சம்பந்தனுடன் கைகோர்க்க மஹிந்த தரப்பு ஆர்வம்' என்ற சாரப்பட வெளியாகி வரும் செய்திகளும், அந்தச் செயற்பாட்டுக்குச் சாதகமான அம்சங்கள் கூட்டமைப்புத் தரப்பில் இருந்தும் பிரதிபலிக்கப்படுகின்றன என்ற தகவல்களும் கூட அரசியல் ரீதியாக அழுத்தத்துக்கான ஒரு முன் நகர்வாகக் கருதப்படக் கூடியவையே.

எது, எப்படியென்றாலும் நல்லாட்சி அரசு மீதான நம்பிக்கை தமிழர் தரப்புக்கு தகர்ந்து வருகின்றது என்பதே இன்றைய நிலைமையாகும்.

### சுமார் 6 கோடி ரூபா செலவில்

# பச்சிலைப்பள்ளியில் அபிவிருத்தித் திட்டம்!

கிளிநொச்சி, ஓக.16

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக 39 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் 5 கோடி 78 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், யுத்தத்தின் பின்னர் மீள் குடியமர்வையடுத்து மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இந்த நிலையில், மீள் குடியேற்ற அமைச்சினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் ஐந்து சிறு குளங்களை புனரமைப்பதற்கும், நான்கு உவர் நீர்த்தடுப் பணைகளை புனரமைப்பதற்குமான ஒன்பது வேலைத் திட்டங்களுக்கு 2 கோடி 30 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், விவசாய அமைச்சினூடாக ஆறு சிறிய குளங்களைப் புனரமைப்பதற்கும், 13 சிறிய குளங்களை ஆழப்படுத்துவதற்கும் என 19 வேலைத் திட்டங்களுக்கு 3 கோடி 10 லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

மேலும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினுடைய நிதியொதுக்கீட்டின் கீழ் உள்ளூரில் காணப்படும் 10 குளங்களைப் புனரமைப்பதற்கும் கைவிடப்பட்ட ஒரு குளத்தைச் சுத்தம் செய்வதற்கும் 3 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க)

# இலங்கையில் கண்டுபிடிக்காத 1,700 எயிட்ஸ் நோயாளிகள்!

மன்னார், ஓக.16

இலங்கையில் 1,700 இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்படவேண்டியுள்ளது என அதிர்ச்சிகரமான தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.



இலங்கையின் தேசிய பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய்த் தடுப்பு மருத்துவப் பிரிவு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பால்வினை நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சிசிர லியனகே ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய நிலையில் 2,200 இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டு முறையான சிகிச்சைகளைப் பெற்று வருகின்றனர்.

எனினும், இலங்கையில் 3,700 வரையான எயிட்ஸ் நோயாளிகள் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. குறைந்த பட்சம் 1,700 இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட வேண் டிய நிலையில் உள்ளனர்.

அவ்வாறானவர்களை இனம் காண்பதற்கும், எயிட்ஸ் நோய் தொடர்ந்தும் பரவாமல் இருப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# தாதியர் பதவிக்கு விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றார் அங்கஜன் எம்.பி.

தாதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியின் மூலம் தாதிய உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது என சு.கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 அல்லது 2016ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கல்விப்பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் தோற்றி மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்தவர்கள் விண்ணபிக்க முடியும்.

அத்துடன் விண்ணப்பதாரி 18தொடக்கம் 28 வயதுக்கு உட்பட்டவராகவும் திருமணமாகாதவராகவும் இருத்தல் அவசியம். விண்ணப்பப்படிவங்களை ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை பெண்களை 95 வீதம் தாதிய உத்தியோகதர்களாகவும் ஆண்களை 5 வீதம் தாதிய உத்தியோகத்தர்களாகவும் நியமிக்கப்பட்டு வந்த நிலையில், இந்த முறை அதிக அளவில் ஆண்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே ஆண்களும் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.


ஒவ்வொரு மாவட்டத்தின் சனத்தொகையை அடிப்படையாக கொண்டு மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப தாதிய உத்தியோகத்தரின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட உள்ளது

வடமாகணத்தில் உள்ள இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் வரப்பிரசாதமாக அமையும் என்பதால் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் இதற்கு விண்ணப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகள் இதற்கு விண்ணப்பித்து நியமனம் பெறுவதன் மூலம் வடக்கு மாகாணத்தில் இருக்கின்ற வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்ப முடியும். இதனால் எமது மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவிவருகின்ற தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியும். ஏனைய மாவட்டங்களில் இருந்து இங்கு வருகின்ற பெரும்பாலான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையையும் குறைக்க முடியும் – என்றும் தெரிவித்தார் அங்கஜன் இராமநாதன். (உ–21)

### இரும்புச் சத்து உடலுக்கு தரும் நன்மைகள்.

- சோம்பல் இல்லாத சுறுசுறுப்பான இயக்கம்.
- ஞாபக சக்தியையும் நுண்ணறிவு விருத்தியையும் அதிகரிக்கும்.
- உள விருத்தியை அதிகரிக்கும்.
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.
- குருதிச் சோகையைத் தடுக்கும்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

17.08.2017
வியாழக்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
மு.இ 10.35 வரை
திதி : தசமி மு.ப 11.26 வரை
சுபநேரம் : 7.35 – 9.05 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# பாதுகாப்பான கடவை அமைக்கக் கோரி ரயிலை மறித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஓக. 16

ரயில் பாதைகளில் பாதுகாப்பான கடவைகளை அமைக்கக்கோரி ரயிலை வழி மறித்து வவுனியாவில் ஆர்ப் பாட்டம் ஒன்று நேற்று இடம் பெற்றது.

இதன் காரணமாக அரை மணிநேரம் ரயில் சேவை பாதிப்படைந்தது.

வவுனியா, தாண்டிக்குளம் பாதுகாப்பற்ற ரயில் கடவை முன்பாக நேற்றுக் காலை 8.05 மணியில் இருந்து 8.35 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து மாங்குளம் வரையிலான ரயில் பாதையில் பல இடங்களில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக கடந்த 3 மாதங்களில் இந்தப் பகுதிகளில் நான்கு விபத்துக்கள் ஏற்பட்டு 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக் குளம் பகுதியில் கொழும்பில் இருந்து யாழ் சென்ற ரயில் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலை வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வழிமறித்த மக்கள் அப் பகுதியில் பாதுகாப்பான ரயில் கடவை அமைக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

இந்தப் பகுதியில் ரயில் கடவை முன்னர் பாதுகாப்பானதாக இருந்த போது விபத்துக்கள் தடுக்கப்பட்டிருந்தன என்றும் தற்போது பாதுகாப்பான கடவை நீக்கப்பட்டு சமிஞ்சை விளக்குள் மட்டுமே பொருத்தப் பட்டுள்ளன எனவும் தெரிவிக் கப்படுகிறது.

நாற்சந்தி அமைந்துள்ள இந்தப் பகுதியில் பொருத்தப் பட்ட சமிக்ஞை விளக்குகள் அந்த வீதி வழியாகப் பயணிப் பவர்களுக்குத் தெளிவாக ஒளி ருவதில்லை எனவும், தமக்குப் பாதுகாப்புக்கடவையே தேவை எனவும் போராட்டத்தில் ஈடு பட்ட மக்கள் தெரிவித்துள் ளனர்.

இது தொடர்பில் ரயில்வே திணைக்களம் மற்றும் மாவட்ட அரச அதிபருக்கும் முன்னர் எழுத்து மூலம் நாம் தெரியப் படுத்தியிருந்தோம் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி, மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆகியோர் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டவர்களு டன் பேச்சு நடத்தினர்.

நாள் ஒன்றுக்கு 250 ரூபா சம்பளம் வழங்கி அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் உடனடியாக அக் கடவையில் கடமையில் அமர்த்தப்படுவர் என்றும் இது தொடர்பில் மாவட்ட அரச அதிபர்தலைமையில் கூடி இறுதி முடிவுகள் எடுக்கப்பட உள்ளன என்றும் பொலிஸ் தரப்பு அங்கு வழங்கிய வாக் குறுதியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.







இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக யாழில் இருந்து கொழுப்பு நோக்கிச் சென்ற ரயில் 30 நிமிடங்கள் தாமதித்தே பயணத்தை தொடர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)

## யாழில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்டின் மனைவி பொலிஸ் சேவையில் இணைந்தார்!

யாழில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் மனைவி நேற்று முன்தினம் பொலிஸ் சேவையில் மீண்டும் இணைந்துள்ளார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியனுக்கு பாதுகாப்பு வழங்கும் போது, இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்டின் மனைவியை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியை கௌரவிக்கும் வகையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் இதற் கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவரால் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னரே அவரை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வ தற்குத் தீர்மானிக்கப்பட்டது.



அதற்கமைய அவரது வீடு அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையமான பள்ளம பொலிஸ் நிலையத்தில் சேவை செய் வதற்கு அவருக்கு நேற்றுமுன்தினம் முதல் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ். நல்லூர் கோயிலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இந்த பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந் தமை குறிப்பிடத்தக்கது.

## அரசிலிருந்து சிலர் வெளியேறுவர்; அமைச்சர் கிரியெல்லவும் கூறுகிறார்!

அரசிலிருந்து சிலர் வெளியேறுவார்கள்என சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இப்போது சலூன் கதவு இரு பக்கமும் திறந்துள்ளது. இதனால், அந்தப்பக்கம் இருந்து வருவதற்கு பலர் இருக் கின்றனர். 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய அமைச்சர்க ளின் எண்ணிக்கை வரையறைக்கு உட் படுத்தப்பட்டுள்ளமை யால், அந்தவரையறைக்கு நாம் வந்துள்ளோம்.

அத்துடன், எதிர்த் தரப்பிலிருந்து அரசுக்கு வருவதற்கு பலர் உள் ளனர். நாம் எண்ணிக் கையை கணக்கெடுக்க வில்லை.

எம்மிலிருந்து சிலர் செல்வார்களானால், வெற் றிடங்கள் ஏற்படும். எனி னும், அந்தப் பக்கம் இருந்து பலர் வருவார் கள். எமக்குப் பிரச்சினை இல்லை. நாம் அரசை முன்கொண்டு செல் வோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவத்தை ஏமாற்றினால் விபரீத விளைவுகள் ஏற்படும்!

### தாய் நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு எச்சரிக்கை

அங்கவீனமுற்ற படையினரைத் தொடர்ந்தும் ஏமாற்ற அரசு முற்பட்டால் விபரீத மான விளைவுகள் ஏற்படும் என்று தாய் நாட் டுக்கான இராணுவத்தினர் அமைப்பு எச்சரித்துள்ளது.

அங்கவீனமுற்ற படையி னர் தமக்கு ஏனைய இராணு வத்தினரைப் போன்று முழுமையான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென கோரி பல மாதங்களாக போராட்டமொன்றை மேற் கொண்டு வருகின்றார்கள். தற்போதைக்கு அவர்களுக்கு குறைவான ஓய்வூதியமே வழங்கப்பட்டுவருகின்றது.

இது தொடர்பாக ஜனாதி பதி மற்றும் பிரதமர் தரப்பி லிருந்து பல்வேறு வாக்குறு திகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எது வுமே நடை முறைப்படுத் தப்படவில்லை.

இதன் காரணமாக அங்க வீனமுற்ற படையினர் தற் போது கொழும்பில் தொடர் சத்தியாக்கிரகம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் மேஜர் அஜித் பிரசன்ன தலைமை யிலான தாய்நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு (மவ்பிம வெனுவென் ரண விருவோ) அங்கவீனமுற்ற படையினர் விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு தீர்வொன்றை வழங்கவேண் டும் என அரசை வலியுறுத் தியுள்ளது.

ஜனாதிபதி இது தொடர் பாக நிதியமைச்சர், ஓய்வூ தியத் திணைக்கள பணிப் பாளர்நாயகம் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் கலந்துரை யாடி நிரந்தரமான தீர்வொன் றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள் ளது.

எதிர்வரும் இரண்டு நாள்களுக்குள் அவ்வாறான தீர்வு வழங்கப்படாவிடில் அங்கவீனமுற்ற படையினர் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களைக் கொழும் புக்கு அழைத்து வந்து வீதிகளை மறித்து ஆர்ப்பாட் டங்கள் மேற்கொள்ளவுள்ள தாகவும் தாய்நாட்டுக்கான இராணுவத்தினர் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், அரசு தொடர்ந்தும் அங்கவீன முற்ற படைவீரர்களை ஏமாற்ற நினைத்தால் விபரீத விளை வுகள் ஏற்படும் என்றும் இந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

## 12 லட்சத்திற்கு மேற்பட்டோர் வறட்சியினால் பாதிப்பு!

கடந்த நாள்களில் நிலவிய வறட்சி காரணமாக 19 மாவட்டங்களில் சுமார் 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும், 137 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனத்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சுமார் ஐந்து லட்சம் பேர் வட மாகாணத்தில் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள் ளனர். இதில் யாழ் மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 35 ஆயிரத்து 476 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 28ஆயிரத்து 652 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தற்போது வடக்கில் மழைவீழ்ச்சி ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பினரின் கோரிக்கைகளுக்கு அமையவே மட்டக்களப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பு!

## நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஓக. 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாகவே மட்டக்களப்பு வீதியமைப்பு , பாலம் அமைப்பது உட்பட பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேல் யுத்தம் நடைபெற்ற பகுதிகளாக படுவான்கரை காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளை உள்ளடக்கியுள்ள அதிகளவிலான கிராம வீதிகள், பாலங்கள் பாதிப்படைந்துள்ளன. அது மாத்திரம் அல்ல பல்வேறுபட்ட கிராமங்களை இணைக்கின்ற பாலங்கள் இன்னும் அமைக்கப்படாமவேயே உள்ளன.

இதனால் மக்கள் நீர் நிலைகளைக் கடப்பதற்கு ஆபத்தான வழிகளைப் பயன்படுத்துகின்றனர். கடந்த காலங்களில் தங்கள் உயிரையும் விட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 03 ஆம் திகதியில் இருந்தே மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இரணமடு - மலயர்கட்டு, நரிப்புல்தோட்டம் - பன்குடாவெளி, சந்திவெளி - திகிலிவட்டை, கிண்ணையடி - முருக்கன்தீவு, மண்டூர், அம்பிளாந்துறை, காஞ்சிரங்குடா போன்ற அமைக்கப்பட வேண்டிய பாலங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அதிகளவில் நான் பேசியுள்ளேன்.

வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பதாக இருந்தால் தீர்வுத்திட்டம் என்ற விடயத்துடன் எமது வடக்கு கிழக்குப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என நாங்கள் பேசியிருந்தோம்.

இது தொடர்பாக ஜனாதிபதியோடும், பிரதமரோடும் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடனும் பேசியிருந்தோம்.

கடந்த 2015 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் போது நாங்கள் பேசியதிற்கு அமைவாக கிராமி வீதிகளை அபிவிருத்தி செய்வோம் என்ற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 60 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இதன் மூலம் மணல் வீதிகளாக இருந்த வீதிகளை நாங்கள் தார் வீதிகளாக மாற்றியுள்ளோம். இதனுடன் முடிந்து விடாமல் தொடர்ந்தும் 2016 ஆம் ஆண்டு கிராமங்களுக்கிடையிலான புதிய பாலங்கள் அமைப்பது தொடர்பாகவும், வீதிகள் புனரமைப்பது தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், எனக்குக் கிடைத்த கிராமிய வீதிகளை புனரமைப்புசெய்யும்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாலங்களுக்கு அண்மித்த பகுதிகளில் காணப்பட்ட வீதிக ளைத் தார்வீதிகளாக மாற்றி னேன்.

2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திற்கு வாக்களிப்பதற்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுடன் வடக்கு, கிழக்கை சேர்ந்த அனைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திக்கத் தீர்மானித்தோம்.

இதன்போது எமது பகுதிகளின் அபிவிருத்தி, தீர்வுத் திட்டம் தொடர்பாகவும் வரவு-செலவுத் திட்டத்திற்கு வாக்களிப்பதற்கு முன்னர் பேச வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கான கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதிக்குள் ஒழுங்கு செய்யப்பட்டது.

இது தொடர்பாக நாங்கள் அவர்களுடன் பேசும் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட வேண்டியுள்ள வீதிகள், அமைக்கப்பட வேண்டியுள்ள பாலங்கள், எமது மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான தொழிற்சாலைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளோம்.

தற்போது என்னால் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்காக 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டங்கள் 2015,2016 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டங்களுக்கு வாக்களிப்பதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அதில் உள்ளது. (க)

## நல்லாட்சி அரசு தொடர்ந்தும் ஏமாற்றுகிறது; கோப்பாவெளி கிராம மக்கள் விசனம்!



நல்லாட்சி என்று சொல்லும் இந்த அரசு மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி வருகிறது என யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அடிப்படை வசதியின்றித் தவிக்கும் மட்டக்களப்பு, பதுளை வீதியில் அமைத்துள்ள கோப்பாவெளி கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இந்த மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கஷ்டங்களுக்கு மத்தியிலும் எங்களது பிள்ளைகளின் எதிர்காலம் நல்ல முறையில் இருக்க வேண்டும் என்பதற்காக தாம் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மட்டக்களப்பு பேருந்துகள்சரியான முறையில் இயங்காமையால் எங்களது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

'சீசன்' சீட்டுக்களை எடுக்க சொல்கின்றனர். இதனை நாம் பல இன்னல்களுக்கு மத்தியில் எடுத்தும் பேருந்துகள் சரியாக இயங்குவதில்லை. இதனால் எமது பிள்ளைகள் படிப்பை இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

பரீட்சைக் காலங்களிலும் இந்த பேருந்துகள் சரியாக இயங்குவதும் இல்லை நாங்கள் எமது பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்ப முடியாமல் உள்ளது.

அரசே இவ்வாறு தவறு செய்தால் நாங்கள் யாரிடம் போய் முறையிடுவது ? ஒரு கிழமையில் 3 நாளைக்கு மட்டுமே பேருந்து இயங்குகின்றது.

மற்றைய நாள்களில் நாங்கள் எங்கு போவது ? அரசு நல்ல அரசு என சொல்கின்றார்கள் இப்போது பார்க்கும் போது பிழையை இந்த அரசுதான் செய்கின்றது எனவும் அவர்கள் தங்களது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளே, அரசியல்வாதிகளே இந்த மாணவ செல்வங்களின் எதிர்காலத்துக்கு நீங்கள் வழிவகுக்க வேண்டியது உங்களது பொறுப்பு அல்லவா என மட்டக்களப்பு, கோப்பாவெளி கிராம மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(க)

## கிழக்கு பல்கலை துணைவேந்தரை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு!

மட்டக்களப்பு - வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வரும் மாணவர்களின் பிரச்சினை முடிவுக்கு வராத நிலையில் துணைவேந்தர் பேராசிரியர் ரி. ஜெயசிங்கத்தை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு நேற்றுமுன்தினம் பிறப்பிக்கப்பட் டுள்ளது.

வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடத் தொகுதியை முற்றுகையிட்டு 5 அம்சக் கோரிக்கைகளுடன் அக்கட்டடத் தொகுதியினுள்ளேயே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக காவலாளிகளைத் தாக்கி அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 19 பேருக்கு எதிராக எறாவூர் பொலிஸ் நிலையம் மூலம் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்காகத் துணைவேந்தர் மன்றில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## வாகனேரி அறநெறி பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டது சமூக அமைப்பால்!





மட்டக்களப்பு - கிரான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வாகனேரியில் இரண்டு மாத காலமாக போதிய நிதி வசதி நிறுத்திவைக்கப்பட்டிருந்த அறநெறி பாடசாலையொன்றின் செயற்பாடுகள் Future mind அமைப்பால் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சமூக அமைப்பின் பெரியோர்களின் உரைகளைத் தொடர்ந்து, வருகை தந்திருந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், மூன்று முன்பள்ளிகளுக்கான தசை நார் விருத்தி உபகரணங்கள் நோர்வே பரந்தாமன் மகேஸ்வரி அறக்கட்டளை உதவியுடன் Future mind அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன.

அதைத்தொடர்ந்து தரம் ஐந்திற்கு கீழ் உள்ள மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்களை அந்தப் பிரதேசத்தில் கல்வி கற்ற மூன்று ஆசிரியர்களை தெரிவு செய்து நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (க)

# 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் 10 மனுக்கள் தாக்கல்!

கொழும்பு, ஓக. 16

இலங்கை அரசால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்பு திருத்த வரைவுக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் 10 மனுக்களைத் தாக்கல் செய்ய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

அனைத்து மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசமைப்பில் திருத்தம் செய்வதற்கான 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு முன்வைக்கப் பட்டுள்ளது.

இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு, பவ்ரல் மற்றும் கபே அமைப்புகள் தயாராகி வருகின்றன.



20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு, இரண்டு வாரங்களாகியுள்ள நிலையில், எந்த நேரத்திலும் இதனை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளமுடியும்.

அனைத்து மாகாணசபைத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தும் வகையிலான இந்தத் திருத்தச்சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது என்று தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் 10 மனுக்களைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

# எமது குடும்ப உறுப்பினர்களை கைதுசெய்ய அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 16

எமது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் கைது செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிணை கொடுக்கல் வாங்கல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை மூடி மறைக்கும் நோக்கில் இவ்வாறு கைதுசெய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது டுவிட்டர் கணக்கில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரகர் வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பிலான விசாரணைகளுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக ஷிரந்தி ராஜபக்ஷ நேற்று குற்ற விசாரணை திணைக்களத்தில் ஆஜராகியிருந்தார். அத்துடன் இன்று யோஷித ராஜபக்ஷ ஆஜராகவுள்ளார்.



நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

இந்த நிலையில் நாமல் தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று முன்தினம் இவ்வாறு பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

# பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் ராஜிதவை கைது செய்யவும்: ஹரித அலுத்கே!

கொழும்பு, ஓக. 16

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவை கைது செய்யுங்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுகாதார அமைச்சிற்குள் பிரவேசித்த மாணவர்கள் 25 ஆயிரம் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினர் எனக் கூறி சிறையில் அடைக்க முடியுமாயின், கோடிக் கணக்கான சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த ராஜித சேனாரத்னவை சிறையில் அடைக்க ஏன் முடியாது?

நிபந்தனைகள் எதனையும் விதிக்காது, இணக்கப்பாடு இல்லாத சந்தர்ப்பத்தில் அரசின் 300 கோடி மில்லியன் ரூபா பணத்தை நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்காக இந்த மாதம் முதல் செலவிடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு விற்பனை செய்ததன் மூலம் வருடாந்தம் 180கோடி ரூபா கிடைக்கும் அதேவேளை, மாலபே தனியார் வைத்தியசாலைக்காக அரசு 300 கோடி ரூபாவை செலவிடுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேரர் தலைமையில் மட்டக்களப்பில் போராட்டம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் காணி அபகரிப்பை நிறுத்த நடவடிக்கையெடுக்கக் கோரி மட்டக்களப்பில் விசேட மத நல்லிணக்க வழிபாடும் கவனவீர்ப்புப் போராட்டமும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மங்கலராம விகாராதிபதிவண.அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தலைமையில்தமிழ் மக்களும்சிங்களமக்களும் ஒன்றிணைந்து இந்த வழிபாட்டையும், கவனவீர்ப்பு போராட்டத்தையும் முன்னெடுத்தனர். மட்டக்களப்பு மாவட்டசிங்கள - தமிழ் மறுமலர்ச்சிக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போராட்டத்தின்போது பிள்ளையாரடி ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றன. அத்துடன் பௌத்த வழிபாடுகளும் நடை பெற்றன.

வழிபாடுகளைத் தொடர்ந்து மட்டக்களப்பு முறாவோடை சக்தி வித்தியாலயத்திற்கு சொந்தமானவிளையாட்டுமைதானம் ஆக்கிரமிப்பு உட்பட மட்டக்களப்பில் இடம்பெறும் காணி அபகரிப் புக்களுக்கு எதிரான கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றும் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் பொது அமைப்புகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் எனப் பெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.

# ஆவா உறுப்பினர்களை வேறு சிறைகளுக்கு மாற்ற அனுமதியைக் கோருகின்றனர் யாழ். பொலிஸார்!

யாழ்ப்பாணம், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, ஆவா குழு உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரை, ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு, பொலிஸார் நீதிமன்ற அனுமதியைக் கோரியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் பல்வேறு குற்றச் சம்பவங்களிலும் ஈடுபட்டார்கள் என்றும், ஆவா குழு உறுப்பினர்கள் என்றும் கைது செய்யப்பட்ட பலர், யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஒரே சிறைச்சாலையில் தடுத்து வைத்திருக்கின்றமையால், சூழ்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஆபத்து இருக்கிறது என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனால், யாழ்ப்பாண சிறைச்சாலையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த நிலையிலேயே, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆவா குழு சந்தேகநபர்களை, நாட்டின் வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு, பொலிஸார் நீதிமன்றங்களிடம் அனுமதி கோரியுள்ளனர் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(க)

# மத்தள விமான நிலையம் தொடர்பில் அமைச்சர் நிமாலின் குழு ஆராய்கிறது!

கொழும்பு, ஓக. 16

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை நிர்வகிக்கும் இந்தியாவின் திட்டவரைவை ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இந்தகுழுவை நியமித்துள்ளார்.

இந்த விமான நிலையத்தால் 1,560 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மத்தள விமான நிலையத்தில் இரண்டரைக் கோடி மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வது தொடர்பான இந்திய அரசின் யோசனை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக மத்தள விமான நிலையத்தின் 70 சதவீத உரிமையை 40 வருட காலத்திற்கு வழங்கவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் இலங்கை அரசு 8.8 கோடி அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என இந்தியா எதிர்பார்த்துள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியாவின் யோசனை திட்ட வரைவு குறித்து, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் நியமிக்கப்பட்ட குழு ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தில் கூட்டு எதிர்க்கட்சி பங்கேற்காது!

ரஞ்சித் சொய்சா எம்.பி. தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தில் கூட்டு எதிர்க்கட்சி பங்கேற்காது என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் பொதுச் சம்மேளனம் நடைபெறவுள்ளது.

இந்த சம்மேளனத்தில் கூட்டு எதிர்க்கட்சியின் எந்தவோர் உறுப்பினரும் பங்கேற்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் கொள்கைகள் இன்று சுதந்திரக் கட்சியை விட்டு விலகிச் சென்றுள்ளன.

நாட்டின் சொத்துக்களை விற்றுச் சாப்பிடுவது பண்டாரநாயக்கவின் கொள்கைக்கு மாறானவை.

இலங்கையை உலக பலம் பொருந்திய நாடுகளின் விளையாட்டுத் திடலாக இந்த அரசு மாற்றியமைத்துள்ளது.

கட்சியின் கொள்கைகளைப் புறந்தள்ளி செயற்படுவதனால் கூட்டு எதிர்க்கட்சி இந்த மாநாட்டில் பங்கேற்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# ரவி கருணாநாயக்க தொடர்பில் கூச்சலிடும் எதிரணியினர் பஸில் விடயத்தில் எதிர்ப்பை வெளியிடாதமை ஏன்?

## வெள்ளை உடை அணிந்தால் மட்டும் போதாது; மனதில் தூய்மை வேண்டும் என்கிறார் சம்பிக்க

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க விடயத்தில் கூச்சலிடும் கூட்டு எதிரணியினருக்கு பஸில் ராஜபக்ஷ விடயத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாதமை ஏன் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பினார்.

மேலும், மஹிந்த அணியில் அனைவரும் வெள்ளை ஆடைகளை அணிந்துள்ள போதிலும் எவரும் தூய்மையானவர்கள் அல்லர் எனவும் அவர் குறிப்பிட்டார். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கூட்டு எதிரணியினர் என்ன நிலைப்பாட்டில் உள்ளனர் என்பது எமக்கு விளங்கவில்லை. அவர்கள் ஊழலை எதிர்க்கின்றனரா அல்லது தம்மைக் காப்பாற்றிக்கொள்ளப் பார்க்கின்றனரா என்பதில் சந்தேகம் உள்ளது.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க விடயத்தில் கூட்டு எதிரணியினர் கூச்சல் எழுப்புகின்றனர். ஆனால் கடந்த ஆட்சியில் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட சிலர் செய்துள்ள ஊழல் விவகாரம் தொடர்பில் ஏன் இவர்கள் கேள்வி எழுப்பவில்லை.

இவர்கள் இன்றும் மஹிந்த தரப்பை நம்பியே அரசியல் செய்து வருகின்றனர். ராஜபக்ஷக்களின் குடும்பத்தில் உள்ள நபர்களுக்கு அப்பால் வேறு ஒருவரைத் தலைவராக்க இவர்களுக்கு தைரியம் இல்லாத நிலைமை தான் உள்ளது.

இவர்கள் அனைவரும் கூட்டாக ஊழல் புரிந்த நபர்கள். ஆகவேதான் இவர்களுக்கு கூட்டணியை விட்டு வெளியேற முடியாத நிலைமை உள்ளது.

மஹிந்த, பஷில், நாமல் ராஜபக்ஷாக்களை விடுத்து இவர்களால் எந்த செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியாது. இவர்கள் அனைவரும் வெள்ளை உடைகளை அணிந்திருந்து அரசியல் செய்கின்ற போதிலும் இந்த அணியில் எவருமே தூய்மையான அரசியல் வாதிகள் அல்லர். அனைவரும் ஊழல் கறை படிந்த நபர்களே.

ஆகவே, இவர்களின் ஊழல் விடயங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு கடந்த கால ஊழல் விடயங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அழுத்தங்களை நாம் தொடர்ந்தும் வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தினசரி ராசி பலன் 16.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 32 ஆம் நாள் நவமித்திதி மாலை 3.17 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: ரோகினி இரவு 12.50 மணி வரை. பின்னர் மிருகசீரிடம். சித்தயோகம் முழுவதும். ராகுகாலம் பகல் 12.14 மணி முதல் 1.47 மணி வரை. சுபநேரம்: மாலை 4.34 மணி முதல் 6.05 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: ஆடி மாத தேய்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ரோகினி.**

‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** யோகமான நாள். எண்ணிய காரியம் கைகூடும். சுபகாரியம் கைகூடும். சிலருக்கு பொன், பொருள் ஆபரண சேர்க்கை உண்டாகும். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**ரிஷபம் :** இன்பமான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்ப உறவில் அன்னியோன்யம் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு ஊதிய உயர்வு இடமாற்றம் என்பன மகிழ்ச்சியைத் தரும்.

**மிதுனம்:** துன்பமான நாள். உடல் நலம் பாதிக்கப்படும். வருமானம் குறையும். குடும்ப உறவில் சலசலப்பு உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அலைச்சல், வீண் சிரமம் உருவாகி விலகும்.

**கடகம் :** உயர்வான நாள். புதிய முதலீடுகள் நன்மை தரும். குடும்பத்தில் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடந்தேறும். பிரிந்துபோன உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புள்ளது.

**சிம்மம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் காணப்படும். குடும்ப அமைதி குன்றும்.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயரும். எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். உடலாரோக்கியத்தில் உற்சாகம் காணப்படும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

**துலாம் :** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும்.

**விருச்சிகம் :** மத்திமமான பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் இருப்பினும், செலவீனங்கள் அதிகரிக்கும். பிறர் விடயத்தில் தலையிடுவதால் பிரச்சினை ஏற்படும்.

**தனுசு :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணப் புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபார விருத்தி உண்டாகும்.

**மகரம் :** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். வீட்டில் மகிழ்ச்சி நிலவும். காரியங்களில் தீவிரகவனம் செலுத்தி வெற்றி காணமுடியும். தொழில் வியாபார வகையினருக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**கும்பம்:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல் அதிகரிக்கும்.

**மீனம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாய் இருக்கும். குடும்ப உறவு சிறப்பாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் வாக்கு தவற நேரிடும் கவனம் தேவை.

**சந்திராட்டமநாள்: சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# அரச படிவங்கள் மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணிகள் ஆரம்பம்!



கொழும்பு, ஓக. 16

பொதுமக்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் அரச படிவங்களை மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய நல்லிணக்கம், கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் இந்தப் பணிகள் நேற்றுமுன்தினம் அமைச்சில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வைபவத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தவை வருமாறு:-

அரச படிவங்களை மும்மொழிகளிலும் மொழிபெயர்க்கின்றமை குறித்து அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்பட்ட போதிலும் மும்மொழிகளிலும் அரச படிவங்கள் இடம்பெறவில்லை.

விசேடமாகத் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

எனவே எந்தவோர் அரச அதிகாரியும் மொழிச்சட்டம் தனக்குத் தெரியாது என்று தட்டிக்கழிக்க முடியாது .

தெற்கு பிரதேசத்தில் அனைத்து அரச படிவங்களும் சிங்கள மொழிகளிலேயே இருக்கின்றன. இது தவறானது மட்டுமன்றி சட்ட விதிமுறைகளுக்கும் முரணானது.

இதேபோன்று வடக்கு , கிழக்கு மாகாணசபை சார்ந்த பகுதிகளிலும் தமிழ் மொழியில் மாத்திரமே படிவங்கள் இருக்கின்றன. இதுவும் சட்டவிதிகளுக்கு முரண்பட்டதாகும்.

நாடு முழுவதும், சிங்களமும், தமிழும் அரச கரும மொழிகள் ஆகும். ஆங்கில மொழி இணை மொழி.

தேசிய பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வு அவசியம் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை. அதேவேளை மொழிக்கொள்கையை முறையாக நடைமுறைப் படுத்தினால் தேசிய பிரச்சினையில் நூற்றில் 50 இற்கு மேற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்.

நாட்டின் எந்தப்பகுதியிலாவது அரச படிவங்கள் வெறுமனே சிங்கள மொழியில் இருக்குமாயின் அது குறித்து எனது கவனத்திற்கு கொண்டு வாருங்கள் நான் நடவடிக்கை எடுப்பேன் என்றும் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (க)

# சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 42 பேர் பொதுஜன பெரமுனவில் இணைவர்!

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிக்கிறார்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியில் செயற்படும் 42 ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமை பெற்றுக்கொள்ள உள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக்கட்சி மீது ஏற்பட்டுள்ள அதிருப்தியும் பொது ஏமாற்றுப் போக்குமே இதற்கு பிரதான காரணங்களாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சியின் தவிசாளராக முன்னாள் வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளார். அந்தக் கட்சியில் உறுப்புரிமையைப் பெற்று எதிர்கால அரசியல் நடவடிக்கைகளைத் தொடர அவர் தீர்மானித்துள்ளார்.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்கட்சியில் செயற்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 42 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவில் இணைவதற்கு தீர்மானித்துள்ளனர்.

மிக விரைவில் இதற்கான அறிவிப்புகள் விடுக்கப்பட உள்ளன. நல்லாட்சி அரசைப் பொறுத்த வரையில் ஆட்சிப் பீடம் ஏறும் முன்னர் வழங்கிய உறுதிமொழிகள் அனைத்தும் புறம்தள்ளப்பட்டுள்ளன. நல்லாட்சியில் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று அனைத்தையும் மறந்து செயற்படுகின்றது.

கட்சியின் கொள்கை மற்றும் ஆதரவாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலையிலேயே சுதந்திரக்கட்சி ஆட்சியில் உள்ளது.

மறுபுறம் தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு அடிபணிந்தே அரசில் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுடன் தொடர்ந்தும் ஒன்றித்து பயணிக்க இயலாது.

எனவே தான் கூட்டு எதிர்க்கட்சியில் உள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவில் இணைவதற்கு தீர்மானித்துள்ளோம். இதற்காக எமது நாடாளுமன்ற உறுப்புரிமையை சவாலுக்கு உட்படுத்தப்பட்டால் அதனை சட்ட ரீதியில் எதிர் கொள்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மனிதப் பண்புகள் சிதைந்த நிலையில் இன்றைய இளம் சமூகம்!

செல்வரட்ணம் சிறிதரன்






வாள்வெட்டுக்குழுவினரின் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ள போதிலும் உண்மையாகவே வாள்வெட்டுச் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் முடிவுக்கு வந்துவிட்டனவா என்பதை உறுதியாக நம்ப முடியாதுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் வடமாகாணத்தை மட்டுமல்லாமல், தென்னிலங்கையிலும் அரசியல் ரீதியாகப் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தன. சாதாரண சமூக விரோதச் செயற்பாடாகவும் சாதாரண இளைஞர்களின் ஒழுக்கப் பிறழ்வு செயற்பாடு சார்ந்த குற்றச் செயல்களாகவுமே வாள்வெட்டுச் சம்பவங்களை பொலிஸார் முதலில் நோக்கியிருந்தனர்.

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட நல்லூர் துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தையடுத்து, மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு பொலிஸார் மீது துரத்தி துரத்தி நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவமே பொலிஸ் திணைக்களத்தைத் தூக்கத்திலிருந்து விழித்தவனைப் போன்ற நிலைக்குத் தள்ளியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச்சம்பவங்கள்அங்குள்ளஇளைஞர்களைப் படுகாயப்படுத்தி நேரடியாகப் பாதித்திருந்தன. குழுக்களாக இயங்கும்இளைஞர்களிடையே ஏற்பட்டிருந்த போட்டிச் செயற்பாடுகள் மற்றும் கண்டறியப்படாத பல காரணங்களே இந்த வாள் வெட்டுச் சம்பவங்களுக்கு அடிப்படைக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

### பயங்கரவாதம் குறித்த உருவகம்

அதேநேரத்தில் பட்டப்பகலில் மக்கள் நடமாட்டம் மிகுந்த கடைவீதி உள்ளிட்ட பல பகுதிகளில் இடம்பெற்ற துணிகரமான வாள்வெட்டுச் சம்பவங்களால் பொது மக்கள் பெரிதும் பீதியடைந்திருந்தார்கள். அடுத்த வாள்வெட்டுச் சம்பவம் எங்கு நடக்கப் போகின்றதோ, யாரை வெட்டிச் சரிக்கப் போகின்றார்களோ, அடுத்தடுத்து என்ன நடக்கப் போகின்றனவோ என்று சாதாரண மக்கள் பெரும் அச்சத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

கொக்குவில் நந்தாவில் பகுதியில் இரண்டு பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள் வெட்டுச் சம்பவம், சாதாரண பொது மக்களில் இருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற பொலிஸாரின் பக்கம் வாள்வெட்டுக் குழுக்களின் கவனம் திரும்பியிருக்கின்றதே என்று பொலிஸ் திணைக்களம் அச்சமடையவும், வாள்வெட்டுக் குழுக்கள் மீது அக்கறை செலுத்திச் செயற்படவும் தூண்டியிருந்தன.

இதனையடுத்தே அவசர அவசரமாக பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ்ப்பாணத்திற்கான அவசர விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அந்த விஜயத்தின் போது யாழ்ப்பாணத்தின் சிவில் பாதுகாப்பு நிலைமைகளையும் சட்டம் ஒழுங்கு நிலைமைகளையும் நேரடியாகக் கண்டறிந்தார். அதற்கு முன்னதாக பொலிஸாரின் அறிக்கைகள், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் குறித்ததோர் உருவகத்தை அவர் கொண்டிருந்தார்.

பொலிஸார் மீதான வாள்வெட்டுச் சம்பவமும், யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர்கள் மீது உயிரைப் பறிக்கும் அளவுக்கு நடத்தப்பட்ட தீவிரமானதொரு துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதலும் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்த அவருடைய உருவகத்திற்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து பயங்கரவாதம் தலைதூக்கியிருக்கின்றது என்ற உருவகத்தையே பொலிஸ் மா அதிபர் கொண்டிருந்தார் என்பதை யாழ் பிரதேச சிவில் பாதுகாப்பு குழுவினர் மற்றும் சமூகப் பெரியார்கள், முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலும், அதன் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலும், அவர் கூறிய கருத்துக்கள் வெளிப்படுத்தியிருந்தன.

### இராணுவம் கூட்டுக் காவல் நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிவிலியன்கள் சார்ந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பங்களும், வாள்வெட்டுக் குழுக்களின் அடாவடித்தனங்களும் அங்கு மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கியிருப்பதையே அடையாளப்படுத்தியிருப்பதாக பொலிஸார் கருதியிருந்தனர். அதன் காரணமாகவே

## வன்முறைக் கலாசாரம் தலைதூக்கியுள்ளதும் அதனாலேயே...!

எந்தக் காரணத்தைக் கொண்டும் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என அவர் அப்போது கூறியிருந்தார்.

அத்துடன், நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக பொலிஸார் அதிரடிப்படையினருடனும், இராணுவத்தினருடனும் இணைந்து கூட்டுக் காவல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அதற்குரிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன எனவும் பொலிஸ் மா அதிபர் கூறியிருந்தார். அது மட்டுமல்லாமல், இத்தகைய கூட்டுச் சுற்றுக்காவல் நடவடிக் கைக்கு அரச தலைவர்களான பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அடவடித்தனமான சம்பவங்களின் பின்னணியில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருக்கின்றனர் எனத் தாங்கள் கண்டறிந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்திருந்த பின்னணியில், ஆயுதப் பயிற்சி பெற்று இராணுவத்தினருடன் சண்டைகளில் ஈடுபட்டிருந்த முன்னாள் விடுதலைப் புலிகளிடம், பொலிஸாரையும் படையினரையும் எதிரிகளாகக் கருதிச் செயற்படுகின்ற மனநிலையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

### படைத்தரப்பிலும் மனப் பாங்கில் மாற்றமில்லை

சண்டையிடுகின்ற மனப்பான்மையில் மாற்றம் காணாத முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீண்டும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு, யாழ் பிரதேசத்தில் அரசுக்குத் தெரிந்தும் தெரியாத இடங்களிலும் மறைத்து வைக்கப்பட்டுள்ள பெருந்தொகையான ஆயுதங்களும் ஊக்குவிக்கும் அம்சமாக இருக்கின்றன என்ற தொனியில் பொலிஸ் மா அதிபரின் கருத்துக்கள் அமைந்திருந்தன.

மிகவும் பிரபலமாகப் பேசப்பட்ட ஆவா குழுவினரே பொலிஸார் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியிருந்தனர் என்பதைக் கண்டறிந்த பொலிஸார், பொலிஸாரைத்தான் தாக்க வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிட்ட வகையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதல்ல என்பதையும் கண்டறிந்திருக்கின்றார்கள். பொலிஸார் மீதான கொக்குவில் வாள்வெட்டுச் சம்பவத்தையடுத்து, ஒரு வாரத்துக்கும் சற்று அதிகமான தினங்களிலேயே அந்த வாள்வெட்டு குழுவினரை இனங்கண்டு, அவர்களின்நடமாட்டங்களைப் புலனாய்வு செய்து, அந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கொழும்பில் வைத்து அவர்களுக்கு சற்றும் சந்தேகம் ஏற்படாத வகையில் சாதுரியமாக, பொலிஸார் திடீரென கைது செய்துள்ளனர்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட முக்கிய சூத்திரதாரியாகிய நிசா விக்டர் என்பவர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருடைய விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் ''ஆவா குழுவில் என்னுடன் தர்க்கப்பட்டுக்கொண்டு பிரிந்து சென்று வேறு ஒரு குழுவை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த தனுரொக் என்பவர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்துவதற்காகச் சென்றபோது இரண்டு பொலிஸார் செல்கின்றமையைக் கண்டு, அவர்கள் தங்களைப் பிடிப்பதற்காகவே வந்தனர் எனக் கருதி அவர்கள் இருவரையும் துரத்தித் துரத்தி வாளால் வெட்டினோம்'' என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலை நடத்தியவர்களின் பெயர் விவரங்களையும் அவர் தனது வாக்குமூலத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

நிலைமை இவ்வாறிருக்க, அதிகமான குற்றச் செயல்களைப் பயங்கரவாத முலாம் பூசி, முன்னாள் விடுதலைப் புலிகள் மீண்டும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட முயற்சிக்கின்றார்கள் அல்லது அவ்வாறு பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் என்று பொலிஸாரும் இராணுவத்தினரும் முடிவு செய்து விடுகின்றார்கள். இதனை ஆவா குழு சம்பந்தமாக 13 பேர் கைது செய்யப்பட்டு நடத்தப்பட்ட விசாரணைகளிலும், யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் அவசர அவசரமாக இராணுவத்தின் துணையை நாடிய செயற்பாட்டிலும் இருந்து தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகளுடனான மோதல்களின்போது, விடுதலைப்புலிகளை எவ் வாறாயினும் அழித்துவிட வேண்டும் என்ற இராணுவ முனைப்புடன் செயற்பட்ட மனப்பாங்கில் இருந்து படைத் தரப்பினரும், பொலிஸாரும் இன்னும் விடுபடாத போக்கையே காணமுடிகின்றது. இதன் காரணமாகவே, வடக் கில் மீண்டும் பயங்கரவாதம் தலையெடுக்கின்றது, முன்னாள் விடுதலைப்புலிகள் மீண்டும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட முயற்சிக்கின்றார்கள் என்ற திடீர் முடிவோடு பொலிஸாரும் இராணுவத்தினரும் கருத்துக்களை வெளிப்படுத்த நேர்ந்திருக்கின்றது.

(மிகுதி 12 ஆம் பக்கத்தில்...)





காலைக்கதிர் Kalaikkathir






# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?” 262

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

## “குண்டுகள் சீறும் என” எச்சரித்தார் ட்ரம்ப்

கொரிய தீபகற்பத்தில், அதுவும் அப்பிராந்தியத்தை மற்றும் உலகையே வேகமாக சூழக்கூடிய, ஒரு போர் அபாயத்தை மிகப்பெரியளவில் அதிகரித்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வட கொரியாவிற்கு எதிராக இரத்தம் உறைய வைக்கும் ஓர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். ‘‘அமெரிக்காவிற்கு இனியும் அச்சுறுத்தல் விடுக்காமல் இருப்பதே வட கொரியாவுக்கு நல்லது’’ என்று அவர் எச்சரித்தார். குண்டுகள், சீற்றம் மற்றும் வெளிப்படையாக, பலம், இவற்றைக் கொண்டு இதற்கு முன்னர் இந்த உலகம் ஒருபோதும் கண்டிராதவற்றை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் குறிப்பிட்டார்.



கடந்த மாதம் வட கொரியா இரண்டு தொலைதூர ஏவுகணை பரிசோதனைகளை நடத்தியமையைத் தொடர்ந்து, வட கொரியா பொருளாதாரத்தை முடக்க அச்சுறுத்தும் விதத்தில் ஐ.நா. பாதுகாப்பு அவை தண்டிக்கும் வகையிலான தடையாணைகளை திணித்ததற்குப் பின்னர் வந்துள்ள ட்ரம்பின் இந்தக் கருத்துக்கள் ஒரு கூர்மையான பதற்ற நிலைமையை எரியூட்ட மட்டுமே செய்யும். ஒரு சிறிய மற்றும் வறிய நாட்டை சாம்பராக்க ட்ரம்ப் அச்சுறுத்துகின்றமை அடாவடித்தனத்தின் உச்சக்கட்டமாக உள்ளது.


அமெரிக்கா ஆட்சி மாற்றத்தையோ அல்லது ஓர் இராணுவத் தாக்குதல் தொடங்குவதற்கான ஒரு சாக்குப்போக்கையோ தேடவில்லை என்று வட கொரியாவுக்கு மறு உத்தரவாதம் வழங்கியதன் மூலமாக, கடந்த வாரம் பேச்சுகளுக்கு அடித்தளம் அமைக்க முயன்ற அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் றெக்ஸ் ரில்லர்சனின் முயற்சிகளுக்கு ட்ரம்ப் வேண்டுமென்றே திட்டமிட்டு குழிபறித்துள்ளார். வரவிருக்கும் நாள்களில் அமெரிக்காவிடமிருந்து ஒரு பெரிய தாக்குதலை அது முகங்கொடுக்கிறது என்று மட்டுமே பியொங்யாங்கில் உள்ள அந்த ஸ்திரமற்ற, நெருக்கடி-நிறைந்த ஆட்சி அனுமானிக்க முடியும். அது ஆத்திரமூட்டும் அதன் சொந்த வாய்ச் சவடால்களைக் கொண்டு விடையிறுத்து வருகிறது.

1962 கியூப ஏவுகணை நெருக்கடிக்குப் பின்னர் உலகம் இந்தளவுக்கு அணுஆயுத போர் விளிம்பின் நெருக்கத்தில் இருந்ததில்லை.

ஓர் அறிக்கையில் வட கொரியா அறிவிக்கையில், மத்திய தூர ஏவுகணைகள் மற்றும் தொலைதூர ஏவுகணைகளுடன் குவாமில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களைத் தாக்க அது ‘‘செயல் திட்டத்தை ஆராய்ந்து வருவதாக’’ அறிவித்தது. இதுபோன்ற அச்சுறுத்தல்கள், அமெரிக்கா வட கொரியாவுக்கு எதிராக முன்கூட்டிய தாக்குதல்களை நடத்த அதற்கு வேண்டிய காரணங்களை வழங்குவதோடு, ட்ரம்ப் நிர்வாகத்தின் கரங்களில் நேரடியாக சாதகமாக்கிக் கொள்ளப்படும்.

1962 கியூப ஏவுகணை நெருக்கடிக்குப் பின்னர் உலகம் இந்தளவுக்கு அணுஆயுத போர் விளிம்பின் நெருக்கத்தில் இருந்ததில்லை. ஒரு சம்பவமோ அல்லது தற்செயலான விபத்தோ, அது சிறியதோ பெரியதோ அதுசீனா மற்றும் ரஷ்யா போன்ற ஏனைய அணு ஆயுத சக்திகளையும் வேகமாக அதற்குள் இழுத்து கணக்கிட முடியாத விளைவுகளுடன் ஒரு மோதல் தூண்டப்படலாம்.

**வட கொரியா பரிசோதனைகள் நடத்தினால் அதை நிர்மூலமாக்கலைக் கொண்டு அச்சுறுத்தி இருப்பதன் மூலம் ட்ரம்ப் அவர் பின்வாங்க முடியாத ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளார்.**







1962 இல் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கென்னடி அந்த நெருக்கடியை தணிக்க முனைந்து கியூபாவில் இருந்த ரஷ்ய ஏவுகணை தளங்கள் மீது குண்டு வீச வேண்டுமென்ற அவரது பாசிசவாத விமானப்படை தலைமை தளபதி ஜெனரல் குர்டிஸ் லீமே இன் கோரிக்கைகளை நிராகரித்து போலல்லாமல், இப்போது ட்ரம்ப் வேண்டுமென்றே வட கொரியா நெருக்கடியை தீவிரப் படுத்தி வருகிறார்.

அவரின் அச்சுறுத்தல்கள் ஓர் அமெரிக்க ஜனாதிபதியிடம் இருந்து முன்னொருபோதும் வந்திராத வகையில் உள்ளது. ஏதேனும் சமாந்தரத்தைக் காணவேண்டின், ஒருவர் ஹிட்லரின் பாசிசவாத கோபங்களைத் தான் திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கும்.

ட்ரம்பின் அறிக்கைகளை ஏதோ வெற்று வாய்ச்சவடால் என்று எவரும் ஒதுக்கிவிடக்கூடாது. மேற்கொண்டு வட கொரியா பரிசோதனைகள் நடத்தினால் அதை நிர்மூலமாக்கலைக் கொண்டு அச்சுறுத்தி இருப்பதன் மூலம் ட்ரம்ப் அவர் பின்வாங்க முடியாத ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளார். அனைத்திற்கும் மேலாக, உள்நாட்டு அரசியல் கொந்தளிப்பிலிருந்து கவனத்தை திசைதிருப்புவதற்கு ஒரு வழிவகையாக வட கொரியா மீது ட்ரம்ப் ஓர் ஈவிரக்கமற்ற தாக்குதலை தொடுக்க முனையலாம் எனும் அளவிற்கு அமெரிக்க ஆளும் வட்டாரங்களில் ஆழ்ந்த நெருக்கடியும், உட்பூசல்களும் நிலவுகின்றன.

அமெரிக்க நகரங்கள் வட கொரியாவின் ஓர் அணு ஆயுத தாக்குதலின் உடனடி ஆபத்தில் இருக்கின்றன என அமெரிக்க பொது மக்களை நம்ப வைக்கும் நோக்கில் ட்ரம்ப் நிர்வாகம் பணி வடக்கத்துடன் கூடிய ஊடகங்களது உதவியோடு ஏற்கனவே ஒரு பிரசார நடவடிக்கையை நடத்திக் கொண்டிருக்கிறது.

வட கொரியா வேகமாக ட்ரம்பின் சிவப்பு கோட்டை அணுகி வருகிறது என்று தலைப்பிட்டு வொஷிங்டன் போஸ்ட் நேற்று ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. பியொங்யாங் ‘‘அது பரிசோதித்து வரும் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் தொலைதூர ஏவுகணைகளில் (IFjB) ஒன்றின் உள்ளே பொருத்தக்கூடிய ஒரு சிறிய குண்டை’’ தயாரித்துள்ளதாக ’’முன்னரே பாதுகாப்பு உளவுத்துறை இரகசிய முகமை ஆய்வில்’’ கூறப்பட்டதை அக்கட்டுரை விமர்சனபூர்வமின்றி வெளியிட்டது.

அந்தக் கூற்றுகள் ஈராக் மீதான சட்டவிரோத படையெடுப்பை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப் பட்ட பேரழிவு ஆயுதங்கள் குறித்த பொய்களை ஜோடித்த அதே அமெரிக்க உளவுத்துறை ஸ்தாபகத்திடம் வந்ததாகும். அவற்றை முகமதிப்பாக எடுத்துக் கொள்ள முடியாது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.






## அத்தியாயம் - V

## வீடுகள் மாறும் படலம்

நவிண்டிலில் பொட்டு அம்மானுடன் சேர்ந்து கொண்டோம். காயங்கள் நன்றாகப் பராமரிக்கப்படாத நிலையில் அவர் இருந்தார். அவருடைய கமக்கட்டுக் காயத்தால் ஊனம் வடிந்து கொண்டிருந்தது. அதற்குக் கட்டுப் போட்டுவிடுமாறு அவர் என்னை வேண்டினார். வெப்ப அவியலான நிலையில் காயங்கள் சீழ் பிடிக்கத் தொடங்கியிருந்தன. அவருடைய வயிற்றுக் காயத்திலும் புதிய சிக்கல். விட்டு விட்டு வலிக்கத் தொடங்கியது. காரணத்தை கண்டு பிடிக்க கருவிகள் எவையும் இல்லை. ஆகவே, பிரச்சினை என்ன என்பதும் தெரியவில்லை. எப்படி சிகிச்சை அளிப்பது என்றும் புரியவில்லை. மென்பதமான ஊசி மருந்தேற்றினேன். அதனால் பலன் எதுவும் இல்லை. இரவு முழுவதும் முனகியபடியே கிடந்தார். அதுவே எம்மை இனங்காட்டக்கூடிய ஆபத்தைத் தோற்றுவித்தது. இரவில் இந்தியப் படைகள் நடமாடும்போது நாய்கள் குரைக்கும். நாம் விழிப்படைந்து விடுவோம். அதை விட்டால் இரவில் வடமராட்சியில் மயான அமைதி நிலவும். இந்த நிலையில் அந்தப் பகுதியில் இந்தியத் துருப்பினர் இருந்தால் பொட்டு அம்மானின் முனகல் எமது மறைவிடத்தைக் காட்டிக் கொடுத்துவிடும்.

பொட்டு அம்மானுடைய காயங்கள் அவரை எளிதாகக் காட்டிக் கொடுத்துவிடும். இனி அவரால் நீண்ட தூரம் நடக்கமுடியாது. அவரைச் சாய்மனைக் கதிரையில் இருந்தி போராளிகள் தோளிலேயே காவ வேண்டியிருந்தது. என்னுடைய இருப்பிடத்தை மறைப்பதற்கு ஒன்றில் நாம் இரவில் பயணம் புரிய வேண்டிஇருந்தது. அல்லது ஒரு நோயாளியைப் போல போர்வையால் தலையிலிருந்து கால்வரை போர்த்தபடியே செல்ல வேண்டும். நெல்லியடியில் உள்ள எமது மறைவிடத்துக்கு இருண்ட பின்னரே நகர்வது என்று தீர்மானித்தோம்.

விடுதலைப் புலி ஆதரவாளர்கள் நெல்லியடியில் தங்களுடைய காணி ஒன்றில் உள்ள ஒரு சிறிய வீட்டை எமக்குத்தந்தார்கள். அது ஒரு பழைய பரம்பரை வீடு. நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இருக்கவேண்டும். உள்ளூர் மூலப் பொருள்களால் கட்டப்பட்ட வீடு அது. கற்களை அடுக்கி, சுண்ணாம்புக் காரையால் மெழுகிய சுவர்கள் கொண்ட பலமான வீடு அது. யாழ்ப்பாண நிலக் கனியவளங்களில் சுண்ணாம்பும் முக்கிய ஒன்றாகும். இரண்டு சிறிய அறைகள் அவற்றில் குட்டி ஜன்னல்கள். அதற்குள்ளேயே அடுக்களையும் இருந்தது. அதனுள் களிமண் அடுப்புகள். ஒருகாணி மூலைக்குள் வேப்ப மர நிழலில் வீடு கட்டப் பட்டிருந்தது. அந்த வீடும் வேம்பும் ஒரே காலத்தைப் போலத் தோன்றின. அடுக்களைக்கு அருகே கொல்லைப் பக்கத்தில் ஒரு பெரிய கிணறு. அதில் குளிர்மையானசுத்தமானபச்சைத்தண்ணீர்.

அந்தப் பகுதி மக்களின் ஆதரவு எமக்கு இருந்தது. அடுத்த நகர்வுக்கு முன் சில நாள்களேனும் அந்த வீட்டில் தங்க முடியும் என்று கருதினோம். அடுத்த இடத்தை ஏற்பாடு செய்வதில் சுக்ளா ஈடுபட்டார். அதை உறுதிப்படுத்த அவருக்கு நேரம் தேவைப்பட்டது. எமது போராளிகளும் வேவு பார்க்கும் பணியில் ஈடுபட்டார்கள். படை நடமாட்டம் அசுமாத்தம் எதுவும் அந்தப் பகுதியில் இல்லை. ஆனால் அதைப் பெரிதாக நம்பிவிடவோ, உசார் நிலையைத் தளர்த்தவோ கூடாது என்பதை எமது அனுபவம் எமக்குக் கற்பித்திருந் தது. நாம் உயிர் தப்பி வாழ வேண்டும் என்றால் எந்த நேரமும் உசாராகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்பதையும் கற்றிருந்தோம்.

## எமது வீடு மீது தாக்குதல்

பொழுது சாயும் நேரம்தான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது. சூழவிருந்த காணியில் விறகு சேகரித்துக் கொண்டிருந்தேன். எதிர்பாராத விதமான சின்னப் பிள்ளைகள் சிலர் எமது வீட்டை நோக்கி மூச்சிரைக்க ஓடிவந்தார்கள். எமது வீட்டை நோக்கி காவல் உலா வந்த சில இந்தியப் படையினர் இரகசியமாக நகர்ந்து கொண்டிருக்கின்றார்கள் என மூச்சுவாங்கிய படியே கூறத் தலைப்பட்டார்கள். பிள்ளைகள் தகவல் தந்த மறுகணம், அந்தப் பகுதியில் வாழும் வேறு ஆள்களும் அவசர அவசரசமாக அங்கே வந்து இராணுவக் காவல் உலா அணி ஒன்றைக் கண்டனர் எனக் கூறினார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்ட இராணுவத்தினர் வேறு திக்கில் இருந்து வந்து கொண்டிருந்தார்கள். பொட்டு அம்மான் இதைக் கேட்டதும் எழுந்து உட்காந்தார். விழிப்படைந்தார். சுற்றி வளைப்புகளில் இருந்து எதிரியைத் திணறியடித்து வெளியேற்றுவதில் அவருக்கு பல ஆண்டு அனுபவம் உண்டு. மட்டக்களப்பில் இருந்தபோது சிறிலங்கா இராணுவம் அவருடைய காட்டு முகாம்களைச் சுற்றி வளைத்தபோது, அவர்களோடு போராடியபடியே நழுவிய அனுபவம் அவருக்கு உண்டு. இராணுவ நடமாட்டம் பற்றிய விவரம் கிடைக்கும்போது எந்தக் கட்டத்தில் அதைப் பற்றிக் கவலைப்படவேண்டும் என்பதை அனுபவத்தால் உணர்ந்திருந்தார். அதே சமயம் வேறும் ஒருபுறத்தில் இருந்து படைகள் வரும் தகவல் வந்தடைந்தது. இதைக்கொண்டு எமது வீடு ஒரு மிகப்பெரிய இந்தியப் படை சுற்றிவளைப்புக்கு உள்ளாகப் போகின்றது என்பது தெளிவாகியது. வெவ்வேறு பக்கங்களில் இருந்து பலத்தோடு நகர்ந்து எமது முகாமைச் சுற்றிவளைத்து தப்பியோடும் பாதைகளைப் படிப்படியாக மூடி அடைக்கப்போகின்றார்கள் என்பது தெரிந்தது. நிலைமை மோசமடைவதும் தெரிந்தது. எமது உடன் தேவை என்ன என்பதைத் தீர்மானித்தேன். பாலாவுடைய இன்சுலின் பையை மட்டும் என்னுடன் வைத்துக் கொண்டேன். எந்த நேரம் ஓடுவதானாலும் அதை எடுத்துக்கொண்டு ஓடினால் போதும். அந்த நேரம் சுக்ளா ஒரு சைக்கிளில் வேகமாக வந்தார். இந்தியப் படைகள் சில நூறு யார் தூரத்தில் வேகமாக வந்து கொண்டிருக்கின்றன எனக் கூறினார். மருந்துப் பையைக் கையில் எடுத்தேன். பாலாவும் நானும் செருப்பை மாட்டிக் கொண்டு வீட்டுக்கு வெளியே தாவினோம். பொட்டு அம்மான் கஷ்டப்பட்டு எழுந்து போராளி ஒருவரின் உதவியோடு வயிற்றைப் பிடித்தபடி வீட்டைவிட்டு நொண்டியபடி வெளியே வந்தார். உள்ளூர் போராளியான கந்தையா முன்னே வழிகாட்டிச் சென்றார். வெளியேறும் பாதையைப் பிடித்தபடி பாதுகாப்பான வேளை பார்த்து எமக்குச் சைகை காட்டினார். எமது நல்ல காலம் இராணுவ அணி ஒன்று ஒரு பெரும் பிழை விட்டது. தங்களுடைய நிலைகளை உறுதிப்படுத்துவதில் தாமதம் செய்தன. சுற்றி வளைப்பை அவர்கள் துரிதமாகச் செய்யாததால் அந்த முக்கிய ஒழுங்கையைக் கடப்பதற்கு எமக்கு நேரம் கிடைத்து. ஒழுங்கையில் தூரத்திலே படைகள் வீடு வீடாகச் சோதனையிடச் செல்வது தெரிந்தது. அவர்கள் அங்கே தங்கள் கருமத்தில் கண்ணாக இருக்கும்போது நாம் ஒவ்வொருவராக ஒழுங்கையைக் கடந்து எமது வீட்டைச் சுற்றி இறுகும் தடத்திலிருந்து தப்பினோம். எமது நிலையை உணர்ந்த உள்ளூர் மக்கள் இந்தியப் படைகள் இருக்கும் திசையை சைகைகளால் உணர்த்தி நாம் எட்டத்தே செல்லுமாறு பார்த்துக் கொண்டார்கள்.

அந்த இடத்திலிருந்து நாம் தப்பிச் சென்று கொண்டிருந்தபோது நாம் விட்டு வெளியேறிய வீட்டுப் பக்கம் அடுதொடராக துப்பாக்கி வேட்டுக் கேட்டது. பின்னர், அங்கே சுற்றி வளைக்கப்பட்ட ஊர் மக்களிடம் இருந்து என்ன நடந்தது என்பது தெரியவந்தது. இந்தியப் படையினர் காட்டிக் கொடுத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆள் ஒருவரின் வழிகாட்டலோடு அந்த இடத்தை மொய்த்து வீட்டை இறுக்கமாக சுற்றி வளைத்து துப்பாக்கிகளை நீட்டிய படி நிலையெடுத்து இருக்கின்றனர். ஒவ்வொருவராக வெளியே வரவேண்டும் என்று உரக்கக் கூறி அழைத்திருக்கிறார்கள். வீட்டுக்குள்ளே ஒரே அமைதி ; சலனமே கிடையாது. பொறுமை இழந்த அமைதி காப்பாளர் தானியங்கி துப்பாக்கியால் வெறும் வீட்டின் மீது சுட்டுத்தள்ளியிருக்கிறார். விரைவில் அவர்களுடைய தவறை உணர்ந்தார்கள். வீட்டின் மீது தாக்குதல் நடத்த வந்த இந்தியப் படையினரை நாம் மண் கவ்வச் செய்திருந்தோம்.

வீட்டுச் சொந்தக்காரரான மார்க்கண்டு மீது படையினர் தங்கள் கைவரிசையைக் காட்டி இருக்கிறார்கள். அந்த நேரம் துணை அரச அதிபராக இருந்த மார்க்கண்டை படையினர் படைப் பாதுகாவலில் கொண்டுபோய் நையப்புடைத்திருக்கிறார்கள். சில நாள்கள் வைத்துக் கொடுமைப்படுத்தியபின் புலிப் போராளிகளுக்கு இனிமேலும் இடவசதி வழங்கிப் பிடிபட்டால் விளைவு மோசமாக இருக்கும் என்ற எச்சரிக்கையோடு அவரை விடுவித்திருக்கிறார்கள். மார்க்கண்டு கிலேசம் அடைந்தார். அவருக்கு ஒரு குமர்ப் பெண்ணும், விடுதலைப் புலிப் போராளியான விஜயன் என்ற மகனும் உள்ளனர். இந்திய இராணுவத்தின் யாழ்ப்பாண நடவடிக்கையின்போது அவர்கள் புரிந்த கொடிய பாலியல் வன்தாக்கல் சம்பவங்கள் பற்றி அறிந்திருந்த அவர் எதிர்காலத்தில் ஏதாவது தண்டனை என்று வந்தால் அந்தத் தண்டனை தமது மகளுக்கே கிடைக்கும் என்று அஞ்சினார். ஆனால், துணிச்சலும் தாராள மனமும் கொண்ட அந்த மனிதர், வளைந்து கொடுக்கவே இல்லை. இந்திய இராணுவம் அந்த வீட்டின் மீது தொடர்ந்து கண் வைத்திருந்ததால் அந்த வீட்டுக்கு திரும்பிச் செல்ல நாம் நினைக்கவே இல்லை.

(தொடரும்...)

*பொட்டு அம்மான் இதைக் கேட்டதும் எழுந்து உட்காந்தார். விழிப்படைந்தார். சுற்றி வளைப்புகளில் இருந்து எதிரியைத் திணறியடித்து வெளியேற்றுவதில் அவருக்கு பல ஆண்டு அனுபவம் உண்டு. மட்டக்களப்பில் இருந்தபோது சிறிலங்கா இராணுவம் அவருடைய காட்டு முகாம் களைச் சுற்றி வளைத்தபோது, அவர்களோடு போராடியபடியே நழுவிய அனுபவம் அவருக்கு உண்டு. இராணுவ நடமாட்டம் பற்றிய விவரம் கிடைக் கும்போது எந்தக் கட்டத்தில் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும் என்பதை அனுப வத்தால் உணர்ந்திருந்தார்.*

காலைக்கதிர் Kalaikkathir



# மனிதப் பண்புகள் சிதைந்த நிலையில் இன்றைய இளம் சமூகம்



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**இளைஞர்களின் போக்கு**

படைத்தரப்பினரின் மனப்பாங்கும், குற்றச் செயல்களை முளையிலேயே கிள்ளியெறிவதற்கான நடவடிக்கைகளை - சரியான திட்டமிட்ட செயற்பாடுகளை - முன்னெடுக்காத காரணத்தினாலேயே யாழ்ப்பாணத்தில் குற்றறச்செயல்களும் வாள்வெட்டுச் சம்பவங்களும் சட்டத்தையும் ஒழுங்கையும் சவால்களுக்கு உள்ளாக்கத்தக்க வகையிலான மணற்கொள்ளை நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்காத போக்கு ஒருபுறமிருக்க, குற்றச்செயல்கள் அதிகரித்த சமூகமாக யாழ்ப்பாண சமூகம் மாற்றமடைவதற்கு ஒரு சாராராகிய இளைஞர்களின் நடத்தைகளும் முக்கிய காரணமாகியிருக்கின்றன.

தமிழர்களின் கலாசாரத் தலைநகராகக் கணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணத்திலேயே பல்வேறு குற்றச் செயல்களும் வாள்வெட்டு, போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் கடத்தல், சிறுமியர் பெண்கள் மீதான பாலியல் வன்கொடூரச் செயற்பாடுகள் உள்ளிட்ட சமூகவிரோதச் செயற்பாடுகளும் அதிகரித்திருக்கின்றன.

குற்றச் செயல்களும் சமூக விரோதச் செயற்பாடுகளும் கட்டுக்கடங்காமல் யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கின்றமை என்பது தமிழர்களின் கலாசாரத்தையும் வாழ்க்கைப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் இழிநிலைக்குத் தள்ளிச் செல்வதற்கு வழிசமைத்திருக்கின்றது. இது கவலைக்குரியது.

அதற்கும் அப்பால், ஒரு சாராராகிய இளைஞர்களின் இத்தகைய போக்கு தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்க்கையையும், தமிழ்ச்சமூகத்தின் எதிர்காலச்சுபிட்சத்தையும்கூட கேள்விக்கு உள்ளாக்கச் செய்திருக்கின்றதுஎன்றேகருதவேண்டியுள்ளது. இந்த நிலைமை, தமிழ் மக்கள் யுத் தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் ஆணிவேராகிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கும்கூட ஒரு முக்கிய சவாலாக மாற்றம் பெறத் தொடங்கியிருக்கின்றது என்பதையும் குறிப்பிட வேண்டியது கட்டாயமாகின்றது.

பிறழ் நடத்தைகள் காரணமாகக் கட்டுக்கடங்காமல் அதிகரித்துச் செல்கின்ற குற்றச் செயல்களையும், சமூக விரோதச் செயற்பாடுகளையும் பயங்கரவாதச் செயற்பாடுகளாக உருவகப்படுத்தி, அதன் மூலம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை முதன்மைப்படுத்தி, இராணுவத்தின்வெளியேற்றம், இராணுவத்தின் வசமுள்ள காணிகளை விடுவித்தல், உள்ளிட்ட அவசரமாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளையும் அரசியல் தீர்வு காணும் அவசியத்தையும் புறந்தள்ளி, காலம் கடத்துவதற்குரிய சந்தர்ப்பத்தை அரசுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த நிலைமைகள் துணை புரியக் கூடும்.



**பழைமையும் நவீனமும்**

குற்றச் செயல்களையும், சமூகவிரோதச் செயற்பாடுகளையும் வெறுமனே பொலிஸாரின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளின் மூலம் மட்டும் முழுமையாகக் கட்டுப்படுத்தி ஒரு நல்ல சமூகத்தை உருவாக்கிவிட முடியாது. யுத்தத்திற்கு முந்திய காலப்பகுதியில் சமூகக்கட்டுப்பாடுகள் இறுக்கமாக இருந்தன. கிராமங்களிலும் பிரதேசங்களிலும் வாழையடி வாழையாக வாழ்ந்தவர்களே வசித்து வந்தார்கள். அத்துடன், கலை, கலாசாரம் பண்பாடு, வாழ்க்கை முறைகள் என்பன வும் ஆன்மீக உணர்வுகளுடன் கூடிய மனிதப் பண்பும் மேலோங்கியிருந்தன. அப்போது கல்வியிலும் பொருள் தேட்டத்திலும், சமூக அந்தஸ்து மிக்க உயர்வான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணமும் நோக்கமும் பொதுவாகச் சமூகத்தில் மேலோங்கியிருந்தன.

ஆனால், முப்பது வருடங்களாகத் தொடர்ந்த யுத்தம் சமூகக்கட்டுப்பாடுகளையும், தனியார், குடும்பங்கள் மற்றும் சமூக வாழ்க்கை நெறிமுறைகளைத்தகர்த்தெறிந்துவிட்டது. இடப்பெயர்வு காரணமாக ஏற்பட்டிருந்த மனம்போன வழியிலான வாழ்க்கை நடைமுறைகளும், இராணுவ மேலதிக்கம் மிக்க நடைமுறைகள் செலுத்திய மோசமான செல்வாக்கும் தகர்த்தெறியப்பட்ட வாழ்க்கை முறைகளை மீளெழச் செய்வதற்குத் தடைக்கற்களாகிப் போயின.

மீள்குடியேற்றத்தின்போது பிரதேசங்களுக்குத் திரும்பி வந்தவர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மனமாற்றங்கள், மாறுபட்ட வாழ்க்கை முறைகள் என்பனவும் பண்பாடுகள் நிறைந்த வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவவில்லை. தொலைக்காட்சியின் தாக்கமும், தவிர்க்க முடியாத கைத்தொலைபேசியின் பயன்பாடும், நவீன தொலைத் தொடர்பு வசதிகளின் ஆதிக்கமும், மக்களுடைய வாழ்க்கையில் வலிமையோடு வந்து நுழைந்த இணையத் தளப் பயன்பாடும், பாரம்பரிய பண்பாடு, வாழ்க்கை முறைகளுக்கு நேர் மாறான வழிமுறைகளில் சமூகத்தை இட்டுச் சென்றிருக்கின்றன.

இந்த நிலைமையும் இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானவர்களை பிறழ் நடத்தை கொண்டவர்களாக்குவதற்குத்தூண்டியிருக்கின்றன என்றே கூற வேண்டும்.

**என்ன செய்யலாம்?**

யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்து அவர் தப்புவதற்கு நல்லூர் முருகனின் அருள் முக்கிய காரணமாய் இருந்தது எனத் தெரிவித்துள்ள மட்டக்களப்பு நீதிவான் எம்.கணேசராஜா, வன்முறை கலாசாரத்தில் மூழ்கியுள்ள இளைஞர்கள் நல்வழிக்குத் திரும்புவதற்கு இறைபக்தியே அவசியம் என்றும் வலியுறுத்தியிருக்கின்றார்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு சொல்லும் நீதிபதிகளாகிய நாங்களும் இறைவனின் சக்தியை மேலாக நம்புகிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு புளியந்தீவு வாவிக்கரை வீதி அருள்மிகு சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின்போது அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் காத்திரமானவை.

''யுத்தத்தின் பின்பு இளைஞர்கள் மத்தியில் நல்ல செயல்களை நாம் எதிர்பார்த்தோம். ஆனால், அவர்கள் மத்தியில் வன்முறை கலாசாரமே அதிகரித்துள்ளது. இறைபக்தி இன்மையே இதற்குக் காரணம். இறைபக்தி இல்லாத காரணத்தால் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. இறை பக்தியில் கரிசனைகொண்டு, அதனை வளர்ப்பதன் மூலம், குற்றமற்ற சமூகத்தை உருவாக்க முடியும். குற்றச்செயல்களுக்கு வெறுமனே நீதிமன்றங்களால் வழங்கப்படுகின்ற தண்டனைகளால் மட்டும் முற்றாக ஒழிக்க முடியாது. நீதிமன்றத் தீர்ப்புக்களால் குற்றச் செயல்களை ஓரளவுக்கே கட்டுப்படுத்த முடியும்'' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலைமையை அவர் சொற்களில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

'கல்வியில் அதிகம் ஆர்வம் காட்டிய யாழ்ப்பாணத்தில் தற்போது போதைப்பொருள் கடத்தல், கசிப்பு உற்பத்தி, போதைப்பொருள் பாவனை, பாலியல் குற்றச் செயல்கள், விபசாரம், வீதிப் போக்குவரத்து விதிகளைமீறிச்செயற்படுவது, பெண்கள் மீதான பாலியல் குற்றங்களைப் புரிதல் போன்ற குற்றச்செயல்களும், சமூக விரோதச் செயற்பாடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றமை வேதனையளிக்கின்றது.

'தற்போது மனிதர்களிடத்தில் மனிதநேயம் அற்று, மாறாக வன்முறைகளைத் தூண்டும் மனப்பாங்கும், வன் முறைகளில் ஈடுபடுகின்ற மனோபாவமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. வெறு மனே நீதிமன்றங்களில் வழங் கப்படுகின்ற தீர்ப்புக்களின் மூலம் மட்டும் இவற்றுக்குத் தீர்வு காண முடியாது. குற்றச் செயல்களைப் புரிவோரின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். குரோதங்களுக்குப் பதிலாக அவர்களிடத்தில் மனிதப் பண்புகள் வளர்ந்து மேலோங்க வேண்டும். அதற்கு ஆன்மீக உணர்வு அத்தியாவசியம். அதன் மூலம் குற்றச்செயல்களிலும் சமூக விரோதச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற இளைஞர்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என நீதிவான் கணேசராஜா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சமூகத்திலும், இளைஞர்கள் மத்தியிலும் ஆன்மீக உணர்வையும் பண்பாட்டுத் தன்மையையும் நல்ல மனோபாவத்தையும் ஏற்படுத்துவதில் மதத் தலைவர்களும், ஆன்மீகவாதிகளும், சமூகப் பெரியார்களும் முன்வர வேண்டும்.

சமூக சீர்திருத்தச் செயற்பாடுகளில் இவர்களுடன் அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளின் பங்களிப்பும் மிகமிக அவசியம். சமூக சீர்திருத்தச்செயற்பாடுகளுக்கான வேலைத்திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் திட்டமிட்ட வகையில் சமூகத்தில் பரவலாக முன்னெடுப்பதற்கு அரசியல் ரீதியான நடவடிக் கைகளை முன்னெடுப்பதில் அவர்களும் கவனம் செலுத்திச் செயற்பட வேண்டியது அவசியமாகும். ■



# மாநாயக்கர்களின் கருத்துக்களை அரசு உதாசீனம் செய்யக் கூடாது!

## வண. ஆனமடுவ தம்மதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

மகாநாயக்க தேரர்களின் கருத்துக்களை அரசு உதாசீனம் செய்யக் கூடாது என கண்டி அஸ்கிரிய பீடத்தின் துணைப் பீடாதிபதி வண. ஆனமடுவ தம்ம திஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கண்டி அஸ்கிரிய மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட போது வண. ஆனமடுவ தம்ம திஸ்ஸ தேரர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கும் அரசமைப்பு தொடர்பில் மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களது கருத்துக்களை அரசு உதாசீனம் செய்வது ஆரோக்கியமானதல்ல.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் நாம் நிலைமைகளைத் தெளிவுப்படுத்தியுள்ளோம்.

அரசமைப்பு இதுவரையில் தயாரிக்கப்படவில்லை என ஜனாதிபதி கூறுகின்றார் எனினும் பிரதமர் எந்த நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்பது தெரியவில்லை.

எனினும், அரசமைப்பு தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தெளிவாகத் தென்படுகின்றது.

புதிய அரசமைப்பின் ஊடாக மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

மேலும், இலங்கை போன்ற சிறிய நாடு ஒன்றுக்கு சமஷ்டி முறைமை பொருத்தமாகாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# கொலைகள் ஊடாக ஆட்சியைத் தொடருவதற்கு அரசு திட்டம் என்கிறார் ரோஹித அபயகுணவர்தன!



கொழும்பு, ஓக. 16

கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வந்துள்ளது என மஹிந்த அணி எம்.பி. ரோஹித அபயகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசு இரண்டு வருடங்களை வீணாகக் கழித்து விட்டது. மீதி வருடங்களை யாவது நல்லமுறையில் கழிக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். அமைச்சரவை மாற்றம் நல்லதொரு மாற்றத்தைக் கொண்டு வரும். அந்த மாற்றத்தோடு நல்ல நிலைமை ஏற்படும் என்று நாம் எதிர்பார்த்தோம்.

ஆனால், அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் சில பொறுப்புகள் மாற்றப்பட்டனவோடு சரி. எதுவும் நடக்கவில்லை. அந்த அமைச்சரவை மாற்றத்தின் பின்புதான் நாட்டின் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது.


பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுகின்றனர். எவராலும் இதைச் சகிக்கமுடியாது. பொருளாதாரம் விழுந்து விட்டது. அரச சொத்துகள் வெளிநாடுகளுக்கு விற்கப் படுகின்றன. நாடு ஓரிடத்தில் ஸ்தம்பித்து நிற்கின் றது. முன்னோக்கி நகரமுடிய வில்லை. தேர்தல்களை நடத்துவதற்கும் அரசால் முடிய வில்லை. தோல்விப் பயமே இதற்குக் காரணம். உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திப் போடப்பட்டுள்ளது. அடுத்து மாகாண சபைத் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடத்துவதற்காக ஒத்திவைக்கப்பட்டு உள்ளன.

சப்ரகமுவ, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆயுட்காலம் இந்த வருடம் செப்ரெம்பரில் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் அசாதாரண நிலைமையை இந்த அரசு இப்போது உருவாக்குகின்றது. கொலைகள் செய்தாவது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலைப்பாட்டுக்கு இந்த அரசு வந்துள்ளது. இதன் விளைவுகளை நாம் விரைவில் அனுபவிக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# உலகின் மிகப் பெரிய விமானம்; கட்டுநாயக்கவில் தரையிறங்கியது!





கொழும்பு, ஓக. 16

உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமாகக் கருதப்படும் ஏ-380 விமானம் டுபாயிலிருந்து புறப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுமுன் தினம் மாலை 4.30 மணியளவில் தரை இறங்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமானத்தில் கண்காணிப்பு செயற்பாடுகள் ஏனைய பயணிகள் விமான சேவைகளைப்போல் முன்னெடுக்கப் படுகின்றன என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருட முற்பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுதளம் புனரமைக்கப்பட்டதன் பின்னர், நவீன விமானங்கள் தரையிறக்கப் படுவது அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் 540 பயணிகள் பயணிக்கக் கூடிய எமிரேட்ஸ் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஏ-380 விமானம் தினந் தோறும் கட்டு நாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப் படும் எனவும் போக்குவரத்து பிரதி அமைச்சர் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே, உலகின் மிகப் பெரிய பயணிகள் விமானமாகக் கருதப்படும் ஏ-380 விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது.

இந்த விமான சேவை தொடர்ந்தும் டுபாயிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கடற்படைத் தளபதியைச் சந்தித்தார் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க!

கொழும்பு, ஓக. 16

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க மற்றும் கடற் படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இராணுவத் தளபதி கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற் படைத்தலைமையகத்திற்கு விஜயமொன்றை மேற் கொண்டிருந்தார்.

இராணுவத் தளபதி தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் கடற்படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

தளபதிகள் இருவரும் இதன் பேது முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இருவருக்குமிடையிலான சந்திப்பில் தங்களது சேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன என இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவின் 71ஆவது சுதந்திர தினம் யாழில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது!







யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 71 ஆவது சுதந்திரதினம் யாழில் நேற்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.


யாழ். இந்திய துணைத் தூதுவர் நடராஜன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.


மதத்தலைவர்களும், பொது மக்களும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதன்போது இந்தியாவின் தேசியக் கொடியை யாழ். இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் ஏற்றி வைத்தமையுடன், பல்கலைக்கழக மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-19)

# இந்தியாவின் 71 ஆவது சுதந்திர தினம்: டில்லி செங்கோட்டை விழாக்கோலம்; நாடுமுழுவதும் பலத்த பாதுகாப்பு!





## மோடியுடன் தொலைபேசியில் ட்ரம்ப் வாழ்த்து



புதுடில்லி, ஓக.16

இந்தியாவின் 71ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு தலைநகர் புதுடில்லியில் உள்ள செங் கோட்டை விழாக்கோலம் பூண்டது. செங்கோட்டையில் பிரதமர் நரேந்திரமோடி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இந்நிகழ்வில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், தேவகௌடா ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலை 7 மணியளவில் செங்கோட்டைக்கு வருகை புரிந்த பிரதமர் மோடி முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண் டார்.

பின்னர் சரியாக 7.30 மணி யளவில் பிரதமர் நரேந்திர மோடி மூவர்ண தேசியக் கொடியை ஏற்றினார். அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள். பின்னர் நாட்டு மக்களுக்கு மோடி உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து டில்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். சுதந்திர தினத்தையொட்டி நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்தியாவின் 71ஆவது சுதந்திரதின விழாவை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன் தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுதந்திர தின வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரதமர் மோடி தனது 'டுவிட்டர்' பக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்த ட்ரம்புக்கு நன்றி கூறிப் பதிவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக் கது.

## சென்னை கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றினார் பழனிச்சாமி!



இந்தியாவின் 71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னைதலைமை செயலகத்தில் காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்று முதலமைச்சர் பழனிச்சாமி தேசியக் கொடியை ஏற்றினார். 71 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னைதலைமை செயலகத்தில் சிறப்பு ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்தன. ஏராளமான மக்கள் கூடி இருந்தனர்.

கோட்டைவளாகத்திற்கு முதலமைச்சர் பழனிச்சாமி 8.15 மணியளவில் வருகை தந்தார். அப்போது அவருக்கு வழங்கப் பட்ட காவல் துறையினர் மற்றும் தீய ணைப்புப் துறையினரின் சிறப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார்.

பின்னர் கோட்டை வளாகத்தில் சரியாக 8.30 மணியளவில் முதல்வர்எடப்பாடி பழனிச்சாமி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். பின்னர், தனது முதல் சுதந்திர தின விழா உரையை நிகழ்த்தினார். மறைந்த முதல்வர் ஜெய லலிதாவை முதலில் நினைவு கூர்ந்து தனது உரையை அவர் ஆரம்பித்தார். முதலமைச்சராக இருந்து சென்னை கோட்டை கொத் தளத்தில் எடப்பாடி பழனிசாமி கொடி யேற்றுகின்றமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## டில்லி ஜந்தர் மந்தரிலிருந்து வெளியேற்றப்பட்டனர் விவசாயிகள்



புதுடில்லி, ஓக.16

டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகள், சுதந்திர தினத்தையொட்டி நேற்று முன்தினம் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட் டனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரியும் விவசாய கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரியும் தமி ழக விவசாயிகள் கடந்த 16 ஆம் திகதி முதல் சங்கத் தலைவர் அய்யாக் கண்ணு தலைமையில் மீண்டும் டில் லியில் போராட்டத்தை தொடங்கினர். இந் நிலையில் சுதந் திரதினத்தையொட்டி டில்லி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தி வரும் தமிழகவிவசாயிகள் நேற்றிரவு அந்த இடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். (ப)

## மந்திர சக்தி பெற சிறுமி நரபலி 7 பேருக்கு மரண தண்டனை

மராட்டிய மாநிலத்தில் மந் திர சக்தி பெறுவதற்காக 7 வய துச் சிறுமியைக் கடத்தி நரபலி கொடுத்துக் கொன்ற வழக்கில் 7 பேருக்கு மரண தண்டனை விதித்து யவாட் மால் மாவட்ட நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

மராட்டிய மாநிலம் யவாட் மால் மாவட்டத்தில் உள்ள சோராம்பா கிராமத்தைச் சேர்ந்த சிலர் கடந்த 2012 ஆம் ஆண்டு மந்திர சக்திகளைப் பெறுவதற் காக அதே கிராமத்தைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமியைக் கடத்தி தலையை துண்டித்து கொடூ ரமாக நரபலி கொடுத்துள் ளனர். பின்னர், சிறுமியின் சடலத்தை எவருக்கும் தெரியாமல் புதைத் துள்ளனர்.

இந்த விவகாரம் வெளியான பின்னர், சிறுமி நரபலி கொடுக் கப்பட்டமை தொடர்பாக 7 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு அம் மாவட்ட நீதி மன்றத்தில் நடந்து வந்த நிலை யில், நேற்று முன்தினம் இதற் கானதீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதில், சிறுமியை சிறிதும் ஈவிரக் கமின்றிக் கொன்ற 7 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட் டார். மேலும், இந்தக் குற்றத்தில் தொடர்புடைய மற்றொரு நப ருக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதித்தும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## பிரபல நடிகர் சண்முகசுந்தரம் காலமானார்



பல்வேறு தமிழ்த் திரைப் படங்களில் குணசித்திர கதா பாத்திரத்தில் நடித்து மக்கள் மத்தியில் பிரபலமானவர் சண் முகசுந்தரம்.

கரகாட்டக்காரன் படம் இவ ருக்கு மக்கள் மத்தியில் பெரும் இடத்தை ஏற்படுத்திக் கொடுத் தது.

இவர் சில நாள்களாகவே உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தார்.

நேற்று சிகிச்சை பலனின்றி சென்னையில் இவர் கால மானார், இது திரையுலகத்தினர் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அரச மருத்துவமனையில் குழந்தைகள் தொடர் மரணம்; உ.பி. அரசுக்கு மனித உரிமை ஆணையம் 'நோட்டீஸ்'!



கோரக்பூர் அரசு மருத்துவ மனையில் 70இற்கும் மேற் பட்ட குழந்தைகள் தொடர்ச் சியாக உயிரிழந்தமை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உ.பி. அர சுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் கட்டளை (நோட் டீஸ்) அனுப்பியுள்ளது.

உத்தரப் பிரதேசம் மாநிலம், கோராக்பூரில் உள்ள பாபா ராகவ் தாஸ் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒட்சிசன் பற்றாக்குறை கார ணமாக ஆறு நாள்களில் 70 இற்கும் மேற்பட்ட குழந்தை கள் அடுத்தடுத்து உயிரிழந்த சம்பவம் நாட்டையே உலுக் கியுள்ளது.

இந்தக் கொடூர சம்பவம் தொடர்பான அறிக்கையை நான்கு வாரத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தேசிய மனித உரிமை ஆணையம் உ.பி. தலைமை செயலாளருக்கு 'நோட்டீஸ்' அனுப்பியுள் ளது.

பாதிக்கப்பட்ட குடும்பத் திற்கு நிவாரணமாக அரசு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் தவறு செய்த அதிகா ரிகள் மீது அரசு என்ன நடவ டிக்கை எடுத்திருக்கிறது? என்பது பற்றிய விவரங்கள் அந்த அறிக்கையில் இருக்க வேண்டும் என 'நோட்டீஸில்' கூறப்பட்டிருந்தது.

கோரக்பூர் அரச மருத்துவ மனை நிர்வாகம் சுமார் 66 லட்சம் ரூபாய் வரை நிலுவை தொகை வைத்ததால் தனியார் நிறுவனம் ஒட்சிசன் ஒட்சி சன்சிலிண்டர்விநியோகத்தை நிறுத்திக் கொண்டது.

இந்த விபரீதம் காரணமாக 70 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன.

இதுதொடர்பாக ஊடகங் களில் செய்தி வெளியானதும், அதன் அடிப்படையில் தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை நடத்துவதும் குறிப்பிடத்தக் கது.

காலைக்கதிர் Kalaikkathir



## வடகொரியாவின் இறக்குமதியை நிறுத்திக் கொள்ளும் சீனா



வடகொரியாவிடம் இருந்து இறக்குமதி செய்த பொருள்களை செப்ரெம்பர் 5ஆம் திகதியுடன் நிறுத்திக் கொள்ள இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த புதிய பொருளாதாரத் தடைக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையிலுள்ள 15 நாடுகளும் ஒப்புதல் வழங்கின.

அதனைத் தொடர்ந்து வடகொரியாவுடனான இறக்குமதியை நிறுத்திக் கொள்ள இருப்பதாக சீனா தெரிவித்துள் ளது.

ஐக்கிய நாடுகளின்தடையை மீறி அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை மேற்கொண்ட வடகொரியாவுடனான இறக்குமதியைச் சீனா நிறுத்திக் கொள்கிறது. வடகொரியாவிலிருந்து இறக்குமதி செய்த நிலக்கரி, இரும்பு மற்றும் இதர பொருள்களை செப்ரெம்பர் 5ஆம் திகதியுடன் நிறுத்திக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதனைச் சீன அரசின் சுங் கத்துறையும் உறுதிப்படுத்தியுள்ளது. (ப)

## நேபாளத்தில் நிலச்சரிவு சாவு 78 ஆக உயர்வு

நேபாள நாட்டில் தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 78 ஆக உயர்ந்துள்ள நிலையில் 35 பேர் காணாமற் போயுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நேபாள நாட்டில் கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது, மழையால் 27 மாவட்டங்கள் வெள்ளக்காடாக காணப்படுகின்றன. ரப்தி மற்றும் புதிரப்தி ஆறுகளில் வெள்ள நீர் கரை புரண்டு ஓடுகின்றது. கரை கடந்து வெளியேறிய வெள்ளநீர் அரித்துச் சென்றதால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், தாழ்வான பகுதிகளில் வசித்த பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள ஜாப்பா, மோராங், சன்சாரி, சப்ட்டாரி, சிராஹா, ரவுட்டாஹட், பன்கே, பார்டியா, டாங் ஆகிய மாவட்டங்களில் வெள்ளநீர் அதிகமாகச் சூழ்ந்துள்ளது. மோராங் மாவட்டத்தில் உள்ள பிராட்நகர் விமான நிலையத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 49 பேர் உயிரிழந்தனர் என நேபாள நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மோராங் மாவட்டத்தில் இன்று ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர். இந் நிலையில், கடந்த நான்கு நாள்களில் மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானவர்கள் எண் ணிக்கை இன்று 78 ஆக உயர்ந் துள்ளது. மேலும், காணாமற் போன 35 பேரை தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என அந் நாட்டின் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சியரா லியோனில் கனமழை; மண் சரிவு!

## 300 பேர் வரை சாவு!!





ப்ரீடவுன்.ஓக.16

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனில் கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 300 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். 179 பேரின் உடல்கள் மீட்கப் பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சியரா லியோனில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகின்றது.

இதனால், அந்த நாட்டின் தலைநகரில் உள்ள மலைப் பகுதியில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில், சுமார் 2000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன. 300 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியிருக்கலாம் எனதகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், பலியானவர்களில் 179 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என அந் நாட்டு அரச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

# 3 வருட காதலரை மணந்த மலேசிய இளவரசி

## ஜோகர்பாரு நகரம் கோலாகலம்!



மலேசிய மன்னரின் மகள் தனது 3 வருடக் காதலரான டென்னிஸ் என்பவரை தந்தையின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டார்.

மலேசியாவின் ஜோகர் மாகாண மன்னரான சுல்தான் இப்ராஹீம் என்பவரின் ஒரே மகள் துன்கு துன் அமீனா.

இவர், நெதர்லாந்தை சேர்ந்த டென்னிஸ் (வயது 28) என்பவரை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் சந்தித்துள்ளார். இவர்கள் இருவருக்குள்ளும் முதல் சந்திப்பிலேயே காதல் மலர்ந்துள்ளது.

அமீனாவின் விருப்பப்படி கிறிஸ்தவரான டென்னிஸ் முஸ்லிமாக மதம் மாறி, முகமது அப்துல்லா ஆனார்.

இவர்களின் திருமணம், மலேசியாவின் ஜோகர்பாருவில் நேற்றுமுன்தினம் கோலாகலமாக நடந்தது.

இங்குள்ள அரண்மனையில் ஆடம்பரமாக நடந்த திருமண நிகழ்ச்சியில் அமீனாவுக்கு, டென்னிஸ் மோதிரம் மாற்றினார்.

அரண்மனைக்குள் நடந்த நிகழ்ச்சியில் 1,200 பேர் பங்கேற்றனர். வெளியில் இருந்தபடி, ஆயிரக்கணக்கானோர், பிரமாண்ட திரைகளில், திருமணத்தைக் கண்டுகளித்தனர். இந்தத் திருமணத்துக்காக ஜோகர் பாரு நகரம் முழுவதும் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸில் மோதல் சம்பவம்; 25 பேர் சாவு



பிலிப்பைன்ஸில் உள்ளூரைச் சேர்ந்த பிரிவினைவாத இயக்கத்தினர் இடையே நிகழ்ந்த மோதலில் 20 பயங்கரவாதிகள் உட்பட 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ராணுவம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் உள்ள மிண்டானாவ் தீவில் சுமார் 2 கோடி மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு ராணுவச் சட்டம் அமுலில் இருக்கின்றது. இந்தத் தீவில் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக ஐ.எஸ். இயக்கத்தினரின் ஆதரவு பெற்ற பயங்கரவாத இயக்கம் ஒன்று இந்தத் தீவை வெளிநாட்டு பயங்கரவாதிகளின் சொர்க்க புரியாக மாற்ற முயன்று வருகின்றது.

எனவே, இந்தப் பயங்கரவாதிகளுக்கு எதிராக உள்ளூரைச் சேர்ந்த மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி (மில்ப்) என்ற பிரிவினைவாத இயக்கத்தினர் போரிட்டு வருகின்றனர். இவர்களுக்கு பிலிப்பைன்ஸ் அரசும், ராணுவமும் ஆதரவு அளித்து வருகின்றன. இது தொடர்பாக அரசுக்கும், இந்த முன்னணியினருக்கும் இடையே ஒப்பந்தமும் போடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், மகுயின்டானாவ் பகுதியில் உள்ள 2 கிராமங்களில் கடந்த 7ஆம் திகதி பயங்கரவாதிகள் நாட்டு வெடிகுண்டுகளால் தாக்குதல் நடத்தினார்கள். இதில் மில்ப் போராளிகள் 5 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு ராணுவத்தினரின் உதவியுடன் மில்ப் படையினர் பதிலடி கொடுத்தமையால் இரு பிரிவினருக்கும் இடையே மோதல் வெடித்தது.

கடந்த 6 நாள்களாக நடந்த இந்தச் சண்டையில் 20 பயங்கரவாதிகள் உள்பட 25 பேர் கொல்லப்பட்டனர் என ராணுவம் தெரிவித்துள்ளது.

# ‘பிக்பென்’ கடிகாரம் 2021 வரை ஓடாது!





பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் இருக்கும் உலகப்புகழ் பெற்ற பிக்பென் கடிகாரம் பராமரிப்புப் பணிகள் காரணமாக எதிர்வரும் 2021ஆம் ஆண்டு வரை இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற கட்டடத்தில் 1859ஆம் ஆண்டில் இந்தக் கடிகாரம் திறக்கப்பட்டது. பிக்பென் என்று அழைக்கப்படும் இந்தக் கடிகாரம் கடந்த 157 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. உலகின் முக்கியமான வரலாற்றுச் சின்னமான பிக்பென் கடிகாரம் பராமரிப்புப் பணிகளுக்காக அவ்வப்போது நிறுத்தப்படுவது வழக்கம்.

அந்த வகையில், கடிகாரத்தில் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் அந்தக் கடிகாரம் அமைந்த எலிசபெத் கோபுரத்தில் திருத்தப் பணி மேற்கொள்ளவும் பிரிட்டன் அரசு முடிவு செய்தது. இதற்காக தனியாக நிபுணர் குழுவும் அமைக்கப்பட்டது. அந்தப் பராமரிப்புக் குழு அடுத்த வாரம் முதல் தனது பணியைத் தொடங்கவுள்ளது. இதனையடுத்து, கடிகாரத்தின் செயற்பாடு வருகின்ற திங்கட்கிழமை முதல் நிறுத்தப்படுகின்றது எனவும். எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு வரை கடிகாரம் இயங்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிக்பென் பழுது பார்த்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு 400 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என பிரிட்டன் நாடாளுமன்ற நிதிக் குழு அறிக்கை தெரிவிக்கின்றது. நான்கு ஆண்டுகள் கடிகாரம் நிறுத்தப்பட்டாலும், ஆங்கில புத்தாண்டு தினத்தை அறிவிக்கும் விதமாக கடிகாரம் மணியடிக்கச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கை பாடசாலைகளின் கிரிக்கெட் சங்க ஏற்பாட்டில் சுற்றுப்போட்டி:

# 17 வயதுப் பிரிவில் சம்பியனாகியது சென்.ஜோன்ஸ் கல்லூரி!

(கங்கா)

யதுகுலனின் பந்துவீச்சு மற்றும் அபிநாஸின் அரைச் சதம் கைகொடுக்க 17 வயதுப் பிரிவு இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வீழ்த்தி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிசம்பியனாகியது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையில் 17 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடைபெற்று வந்தது. இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 12 ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்கக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி,ஆரம்பஇணைப்பாட்டம் மாத்திரம் 55 ஓட்டங்களை கடந்தது நம்பிக்கையளித்தது. எனினும், பின்னர் வந்த துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார்கள்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 41.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜனதர்சன் 57 ஓட்டங்களையும், பிரிய லக்ஸ்மன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஜதுகுலன் 10 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், அபிநாஸ், டெனசாந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

133 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ் அணிக்கு, ஆரம்பம் அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. எனினும், அதன் பின்னர்வந்த வீரர்கள் அணிக்கு நம்பிக்கையளித்தனர். அவர்கள் வெற்றியை நோக்கி அணியை நகர்த்தினர். இறுதிவரையில் தனியாளாக போராடிய அபிநாஸ் அரைச்சதம் கடந்து, இறுதிவரையில் ஆட்டமிழக்காதிருந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். சென். ஜோன்ஸ் அணி 39.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அபிநாஸ் 50, பிரசன்னா 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மதுசன் 6 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், நிதுசன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

# வெளுத்தார் ரியூடர் : வென்றது பற்றீசியன்

(கங்கா)

நிசாந்த் ரியூடரின் அதிரடித் துடுப்பாட்டம் கைகொடுக்க விரைவாக இலக்கைத் துரத்தி வெற்றியை சுவைத்தது பற்றீசியன் விளையாட்டுக்கழகம்.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி. மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் 6 அணிகள் இடம்பெற்று அவற்றுக்கிடையில், லீக் முறையில் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள் காலிறுதி ஆட்டங்களுக்குத் தகுதி பெறும். காலிறுதி தொடக்கம் இறுதிப் போட்டிவரையான ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெறும். அந்த வகையில் இந்தச் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 68 போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஏ பிரிவில் சென்றலைட்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், ஸ்ரீகாமாட்சி, ஸ்ரான்லி, அரியாலை மற்றும் விக்டோரியன்ஸ் ஆகிய அணிகள் உள்ளன.

பி பிரிவில் ஜொனியன்ஸ், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், ஹாட்லியன்ஸ், ஸ்கந்தா ஸ்ரார், றெஜின்போ மற்றும் கிறாஸ்கோப்பர் ஆகிய அணிகள் உள்ளன.

சி பிரிவில் ஒல்கோட், சென்றல், திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ, யூனியன்ஸ், பற்றீசியன்ஸ் மற்றும் மானிப்பாய் பரிஸ் ஆகிய அணிகள் உள்ளன.

டி பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி கிரிக்கெட் கழகம், டிறிபேக், நியூஸ்ரார், விங்ஸ், ராரோன் ஆகிய அணிகள் உள்ளன.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் சி பிரிவு அணியில் இடம்பிடித்துள்ள மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிசோக் குமார் 61 ஓட்டங்களையும், சுபதீபன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக, றதீஸன், நோபேர்ட் மற்றும் கவாஸ்கர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பற்றீசியன் அணிக்கு, நிசாந்த் ரியூடர் - அனோஜன் இணைப்பாட்டம் பலமாக அமைந்தது.

ரியூடர் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார். பற்றீசியன் அணி, 16.4 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ரியூடர் 62 ஓட்டங்களையும், அனோஜன் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், சிந்துஜன் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

## அடுத்த ஐந்து போட்டிகளில்

# ரொனால்டோ விளையாடத் தடை; நடுவரை பிடித்துத் தள்ளியதால்!



பார்சிலோனா அணியுடனான ஆட்டத்தின் போது நடுவரை பிடித்து தள்ளியமையால் ரியல் மாட்ரிட் அணி வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு ஐந்து போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.


ஸ்பெயின் நாட்டில் நடைபெற்று வரும் ஸ்பானிஸ் சூப்பர் லீக் தொடரில் பார்சிலோனா மற்றும் ரியல் மாட்ரிட் அணிகள் மோதிய முக்கியமான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், 3:1 என்ற கணக்கில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது.

போட்டியின் போது ரியல் மாட்ரிட் அணியின் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ களநடுவரிடம் மஞ்சள் அட்டை பெற்றார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ரொனால்டோ கோல் அடித்ததும் தனது ஜெர்சியை கழற்றி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். விதிமுறைகளின் படி இது தவறு என்பதால் களநடுவரிடம் இரண்டாவது மஞ்சள் அட்டையை அவர் பெற்றார். இரண்டு மஞ்சள் அட்டை என்பது சிவப்பு அட்டைக்கு சமம் என்பதால் அவரைக் களத்திலிருந்து வெளியேறுமாறு நடுவர் கூறினார்.

இதனால், நடுவருக்கும் ரொனால்டோவுக்கும் இடையே வாக்குவாதம் வெடித்தது. அப்போது, நடுவரை ரொனால்டோ பிடித்து தள்ளினார் எனக் கூறப்படுகிறது. சிவப்பு அட்டை பெற்றமையால் ஏற்கனவே அவரால் ஒரு போட்டியில் விளையாட முடியாத நிலையில், நடுவரைத் தள்ளிய விவகாரத்தில் மேலும், நான்கு போட்டிகளில் அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அடுத்த ஐந்து போட்டிகளில் அவரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கு எதிராக அவரால் மேல் முறையீடு செய்ய இயலும் என்பது குறிப்பிடத்தக்கது.



# உலக தடகள போட்டி: பதக்கப் பட்டியலில் அமெரிக்கா முதலிடம்

16ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்து தலைநகர் லண்டனில் நடந்தது. கடந்த 4ஆம் திகதி தொடங்கிய இந்தப் போட்டி இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நிறைவு பெற்றது.

16 ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்கா 10 தங்கம், 11 வெள்ளி, 9 வெண்கலம் என்று மொத்தம் 30 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்துள்ளது.

கடந்த முறை முதலிடம் பெற்ற கென்யா 5 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கத்துடன் 2ஆவது இடம் பெற்றது. மொத்தம் 38 நாடுகள் பதக்கப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. கடைசி நாளில் நடந்த ஆண்களுக்கான உயரம் தாண்டுதலில் கட்டார் வீரர் முடாஸ் எஸ்சா பார்ஷிம் 2.35 மீற்றர் உயரம் தாண்டி முதல்முறையாக தங்கப்பதக்கத்தை வென்றார். 800 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தென்னாபிரிக்க வீராங்கனை கேஸ்டர் செமன்யா ஒரு நிமிடம் 55.16 வினாடியில் பந்தய தூரத்தைக் கடந்து 2ஆவது முறையாக தங்கப்பதக்கம் வென்றார்.

2016ஆம் ஆண்டு ஒலிம்பிக் சம்பியனான செமன்யா 2009ஆம் ஆண்டு உலக போட்டியில் தங்கம் வென்றிருந்தார். பெண்களுக் கான 4X400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் அமெரிக்க அணி தங்கப்பதக்கம் வென்றது. தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற அமெரிக்க அணியில் இடம் பெற்று இருந்த அலிசன் பெலிக்ஸ் உலக தடகள போட்டியில் அதிக பதக்கம் (11 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம்) வென்ற வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார். அவர் ஒலிம்பிக் போட்டிகளில் 6 தங்கம், 3 வெள்ளிப்பதக்கமும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எவராலும் சகிக்க முடியாத தோல்வி!



## காயங்களும் காரணம் என்கிறார் இலங்கை அணித் தலைவர் சந்திமல்



13 வருடங்களின் பின் இலங்கை அணி சகிக்க முடியாத தோல்வியைப் பெற்றுள்ளது. இத் தோல்விக்கு வீரர்களின் தொடர்ச்சியான காயங்களே காரணம் என்று இலங்கை அணித் தலைவர் சந்திமல் தெரிவித்துள்ளார்.

சரியாக ஓர் ஆண்டுக்கு முன் உலகின் முதல் நிலை அணியான ஆஸ்திரேலியாவை 3:0 என்று வீழ்த்திய இலங்கை அணிக்கு, தற்போதைய முதல் நிலை டெஸ்ட் அணி யான இந்தியா இன்று டெஸ்ட் தொடரை 3:0 என வீழ்த்தி பதிலடி கொடுத்துள்ளது.

கடந்த 12 மாதங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் இந்தக் கடுமையான மாற்றங்கள் இலங்கை கிரிக்கெட்டின் கவலைக்குரிய நிலைமையை எடுத்துக் காட்டுகிறது. ஆனால், இலங்கை அணித் தலைவர் தினேஷ் சந்திமால் இந்தியாவுடனான தொடர் முழுவதிலும் நீடித்த காயங்களை இந்தத் தோல்விக்கான காரணமாகக் குறிப்பிடுகின்றார்.

காயங்களே கவலைக்குரிய முக்கிய விடயமாக நான் கருதுகிறேன். ஆஸ்திரேலிய தொடரில் நாம் அனைவரும் நல்ல உடல் தகுதியுடன் இருந்தோம். ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. எல்லோருமே பங்களிப்புச் செய்தார்கள். இந்தத் தொடரில் நுவன் பிரதீப் தொடக்கம் சுரங்க லக்மால், ரங்கன ஹேரத், அதற்குப் பின் அசேல குணரத்ன என்று பல உபாதைகள் பதிவாகின. கடந்த ஆறு மாதங்களாக இவர்கள் திறமையாக ஆடி வந்தார்கள். இதுவே பிரதான விடயம். நான் நியாயம் கூறப்போவதில்லை. எம்மால் இதனை விடவும் நன்றாக விளையாடி இருக்க முடியும் என்று சந்திமால் தெரிவித்துள்ளார்.


ஒட்டுமொத்தமாக மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஆட்டத்தை 5ஆவது நாள் வரை எடுத்துச் செல்ல முடியாதது இந்தியா போன்ற வலுவான அணி ஒன்றுக்கு எதிராக இலங்கையின் தகுதியின்மையை காட்டுவதாக உள்ளது. பல்லேகல டெஸ்டில் இலங்கை இரண்டு இன்னிங்ஸுகளிலும் 200 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை. போட்டி மூன்று தினங்களுக்குள் முடிந்ததோடு இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்களால் தோற்றமை இலங்கையின் ஐந்தாவது மிகப்பெரிய இன்னிங்ஸ் தோல்வியாகவும், சொந்தமண்ணில் இரண்டாவது மிகப்பெரிய தோல்வியாகவும் காணப்படுகிறது.

எனக்கும் அணியினருக்கும் இது மிகக்கடினமான ஒன்றாகும். இந்தியாவுக்கே அனைத்து பெருமையும் சேர வேண்டும். தொடரில் அவர்கள் மிகச் சிறப்பாக விளையாடினார்கள். எம்மால் ஆட்டத்தை ஐந்தாவது தினம் வரை எடுத்துச் செல்லத் முடியுமாக இருந்திருந்தால் எதனையாவது கற்றுக்கொள்ள முடிந்திருக்கும். இதற்காக நான் அதிகம் ஏமாற்றம் அடைந்திருக்கிறேன். ஆனால், இரண்டரை தினங்களுக்குள் போட்டியில் தோற்றதற்கு எந்த நியாயமும் கூறமுடியாது என்று சந்திமால் மேலும் கூறினார்.

ஸிம்பாப்வேயுடனான ஒரே ஒரு டெஸ்ட் போட்டிக்கு முன்னரே தினேஷ் சந்திமால் இலங்கை டெஸ்ட் அணித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அந்தப் போட்டியில் இலங்கை 388 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை எட்டி வெற்றி பெற்றது. எனினும், நியுமோனியா காய்ச்சல் காரணமாக அவரால் இந்தியாவுடனான காலி டெஸ்டில் விளையாட முடியாமல் போனது. அணிக்குத்திரும்பியது தொடக்கம் சந்திமால் தனது 4 இன்னிங்ஸுகளிலும் 94 ஓட்டங்களையே பெற்றார். இதன் ஓட்ட சராசரி 24 மாத்திரமாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் சந்திமாலின் இரண்டாவது மோசமான துடுப்பாட்டமாக இது இருந்தது. இந்த தொடரில் இலங்கை அணியின் முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களில் அரைச்சதம் கூடப் பெறாத ஒரே வீரர் சந்திமால் ஆவார்.

தொடர்ச்சியான திறமையை வெளிக்காட்டாதமை இந்த தொடரில் ஒரு பெரிய பிரச்சினையாகும். நான் குறிப்பிட்டமை போல, சில வீரர்களால் எல்லா தொடர்களிலும் திறமையை வெளிக்காட்ட முடியாது. ஒரு மூத்த வீரராக சிறப்பாகச் செயற் பட வேண்டும். அப்போதே இளம் வீரர்கள் அதனை பின்பற்றுவார்கள். ஒருதலைவராக நான் இதற்கான நியாயத்தை ஏற்க விரும்புகிறேன். வீரர்கள் உளரீதியில் வீழ்ச்சி அடைவதை எம்மால் விட்டுவிட முடியாது. நாம் இந்தச் செயல் முறையை சரியாகச் செய்கிறோம். எம்மால் பெறுபேற்றை விரைவாக பெற முடியாது. ஆனால், எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று நாம் உறுதியாக உள்ளோம். அடுத்த தொடரில் அனைவரும் சிறப்பாக விளையாடுவார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன் என்று சந்திமால் தெரிவித்துள்ளார்.

## பெண்களுக்கான வேகநடைப் போட்டி: போர்த்துகலின் ஐனெஸ் புதிய உலக சாதனை



உலக மெய்வன்மைப் போட்டிகளின் கடைசி நாளான ஞாயிறன்று நடைபெற்ற பெண்களுக்கான 50 கிலோ மீற்றர் வேகநடைப் போட்டியில் போர்த்துகல் வீராங்கனை ஐனெஸ் ஹென்றிக்ஸ் புதிய உலக சாதனையை நிலைநாட்டினார்.

இவர் இப் போட்டியை 4 மணித்தியாலங்கள் 05 நிமிடங்கள் 56 செக்கன்களில் நிறைவு செய்தே புதிய உலக சாதனையை நிலைநாட்டினார்.

இவ் வருட உலக மெய்வன்மைப் போட்டிகளில் நிலை நாட்டப்பட்ட ஒரே ஒரு உலக சாதனை இதுவாகும்.

இதேவேளை, ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் வேக நடைப் போட்டியில் பிரான்ஸ் வீரர் யோஹாக் டினிஸ் 3 மணித்தியாலங்கள் 33 நிமிடங்கள் 12 செக்கன்களில் புதிய போட்டி சாதனையை நிலைநாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டோனிக்கு இனிமேல் வாய்ப்புக் கிடைக்காது; இதுவே கடைசி – தேர்வுக் குழு தலைவர்



டோனிக்குஇனிவாய்ப்புகள் அதுவாகத் தேடிவராது, இதுவே கடைசி, இனி வரும் தொடர்களில் அவர் அவருடைய இடத்திற்காக போராட வேண்டி இருக்கும் என்று தேர்வுக் குழு தலைவர் பிரசாத் தெரிவித்துள்ளார்

இந்திய-இலங்கை அணிகளுக்கிடையேயான 5 ஒரு நாள் மற்றும் ஒரு ரி-20 போட்டி கொண்ட தொடர் வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான இந்திய அணி வீரர்கள் நேற்று அறிவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தேர்வுக்குழு தலைவர் பிரசாத், டோனிக்கு வாய்ப்புகள் அதுவாகத் தேடி வராது. இதுவே கடைசி இனி வரும் தொடர்களில் அவர் அவருடைய இடத்திற்காக போராட வேண்டும். நன்றாக செயற்பட்டால் மட்டுமே அவருக்கான இடம் அணியில் கிடைக்கும். இளம் வீரர்கள் பலர் வெளியே காத்துக்கிடக்கின்றனர். அவர்களும் நன்றாக செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கும் அணியில் இடம் கொடுக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரை மனதில் வைத்து அனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்.

## சொந்த மண்ணில் இலங்கை தோற்றது வேதனையளிக்கிறது!

**கலங்கிய ஜெயசூர்யா**



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை சொந்த மண்ணில் இலங்கை இழந்துள்ளது வேதனையளிக்கின்றது என சனத்ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்

இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் இந்தியா அந்த அணிக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாக கைப்பற்றிச் சாதனை படைத்தது.

இலங்கை அணி தோல்வி குறித்து அந்த அணியின் முன்னாள் வீரரும், தெரிவுக் குழுத் தலைவருமான ஜெயசூர்யா கூறுகையில், சொந்த மண்ணில் இந்தியாவிடம், 3:0 என இலங்கை தோல்வியடைந்தது மிகவும் வேதனையைத் தருகிறது.

அதுவும், இலங்கை இரண்டு இன்னிங்ஸில் 135 மற்றும் 181 என ஓட்டங்கள் எடுத்து 3ஆவது நாளிலேயே தோல்வியைத் தழுவியது கஷ்டமாக உள்ளது எனக் கூறியுள்ளார். இந்தக் கடினமான நிலையில், இலங்கைவீரர்களுக்கு ஆறுதல் அளிப்பதோடு அவர்கள் மீண்டு வருவதற்கு நாங்கள் உதவ வேண்டியது அவசியம் எனவும் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

## உதைபந்தாட்டத் தொடரில் சம்பியனானது ஊரெழு றோயல் அணி



அரியாலை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி சம்பியனானது.

அமரர்களான யோகநாதன், பாக்கியலட்சுமி ஞாபகார்த்தமாக இந்தத் தொடர் நடத்தப்பட்டது. இறுதி ஆட்டம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதற்பாதி முடிவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் றோயல் விளையாட்டுக் கழக அணிக்கு தண்டனை உதை கிடைக்க அதனைத் தர்ம குலநாதன் கோலாக மாற்றினார். இதனால் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் முதல் பாதியின் முடிவில் முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் தேவா தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்தார். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.

சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று றோயல் அணி.

அரியாலை ஐக்கிய அணியின் தேவா ஆட்டநாயகனாகவும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியின் றூபகரன் சிறந்த கோல்காப்பாளராகவும் தெரிவானார்கள்.

## ஜேர்மனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"மேலும் ஆவா குழுவுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் வழங்குதல் உள்ளிட்ட பல உதவிகளை செய்வோர் தொடர்பாக இன்டபோல் உதவியை கேட்கவுள்ளோம். இதேபோல் ஆவா குழு உறுப்பினர்களுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் மற்றும் உதவிகளை வழங்கும் ஜேர்மன் நாட்டை சேர்ந்த ஒருவர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார். மேலும் விசாரணைகள் தீவிரமாக நடைபெற்று கொண்டிருக் கின்றன. மேற்கண்டவாறு பொலிஸார்தமக்குகூறியிருக்கின்றனர் என வடமாகாண முதலமைச்சர் சி. வீ. விக்னேஸ்வரன் நேற்று ஊடகங்களுக்கு கருத்து கூறியிருக்கின்றார்.

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் நேற்று இரண்டாவது தடவையாக முதல்வர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் 11 மணி வரை முதலமைச்சர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. மேற்படி சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். சந்திப்பு தொடர்பாக மேலும் அவர் கூறியவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழு உறுப்பினர்கள் பலர் கடந்த ஒரு மாத காலத்தில் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில், யாழ்.மாவட்டத்தில் வாள்வெட்டுச் சம்பவங்கள் குறைந்திருப்பதாக பொலிஸார் கூறியிருக்கின்றனர். இது முன்னேற்றகரமான நடவடிக்கையாக பார்க்க வேண்டியிருக்கின்றது.

இதேபோல் கடந்த மாதம் நடைபெற்ற பொலிஸாருடனான கலந்துரையாடலில் ஆவா குழு உள்ளிட்ட வாள்வெட்டு குழுக்களுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் உள்ளிட்ட உதவிகளை வழங்குவோர் தொடர்பான தகவல்களை பெறுமாறு பணித்திருந்தேன். அந்த விடயம் தொடர்பாக பொலிஸார் இன்றும் பேசியிருந்தார்கள்.

குறிப்பாக வெளிநாட்டில் இருந்து பணம் மற்றும் உதவிகளை வழங்குவோர் தொடர்பாக தீவிரவிசாரணைகளைத்தாங்கள் நடத்தி வருகின்றனர் எனப்பொலிஸார் கூறியிருக்கின்றார்கள்.

விசேடமாக ஜேர்மன் நாட்டில் உள்ள ஒருவர் தொடர்பாகவும் வேறு சிலர் தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தவிடயம்தொடர்பாக இன்டபோல் உதவியைப் பெறுவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அவர்கள் கூறியிருக் கின்றார்கள்.

எனவே கடந்த ஒரு மாத காலத்திற்குள் முன்னேற்றம் காணப்பட்டிருக்கின்றது. பொலிஸாருக்கும் எனக்குமிடையில் நடக்கும் சந்திப்புக்கள் ஆரோக்கியமானவையாக இருக்கின்றன - என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற இளம் குடும்பத் தலைவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

ஒரே படகில் நான்கு மீனவர்கள் கடலுக்குச்சென்ற நிலையில் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளானார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டது. (உ)

## பொலிஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்துகொள்ளாமைதொடர்பாகப் பேசப்பட்டது. குறிப்பாக 474 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் 20 இளைஞர்கள் எங்களிடம் விண்ணப் பங்களை பெற்றிருந்தார்கள். அவர்களில் 2 பேர் மட்டுமே விண்ணப்பித்திருக்கின்றார்கள்.

அதேபோல் சப்இன்ஸ்பெக்டர் பதவிக்கு 18 பேர் விண்ணப் பங்களைப் பெற்றனர். ஆனால் ஓர் இளைஞர் மட்டுமே விண்ணப்பித்திருக்கின்றார்.

ஆனால் வடக்கில் தமிழ் பொலிஸாருடைய தேவை அதிகமாகவே இருக்கின்றது. எனினும்தமிழ்இளைஞர்கள்பொலிஸ் சேவையில் இணைய தயக்கம் காட்டுகின்றார்கள். இந்நிலையில் அடுத்து என்ன செய்வது என கேள்வி எழுகின்றது.

மேலும் நீதிமன்றங்களிலும், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் தமிழ் பொலிஸாருடைய தேவை அதிகமாக உள்ளது என இன்றும் பொலிஸார் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். எனவே தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைந்துகொள்ள வேண்டும்.

இதேபோல் இன்றைய சந்திப்பில் மேலும் சில விடயங்கள் பேசப்பட்டன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்களுக்கான கட்டடங்கள் இல்லை என கூறியிருக்கின்றார்கள். தற்போது பொலிஸார் பல இடங்களில் வாடகைக்கு வீடுகளை எடுத்தே தாங்கள் தங்கியிருக்கின்றார்கள் எனக் கூறினார்கள். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் வறுமை காரணமாக யாழ். மாவட்டத்தில்பலமாணவர்கள் பாடசாலைக் கல்வியை நிறுத்துகின்றனர் எனப் பொலிஸார் கூறினார்கள். இதனைக் கருத்தில் கொண்டு புலமைபரிசில்ஏதாவது வழங்கி மீண்டும் அவர்களைப் பாடசாலைகளில் மீளஇணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் நீதிமன்றங்களில் குடும்ப ஆலோசகர்கள் இல்லமை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது.

அது தொர்பாக பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதவுள்ளேன். மேலும் சட்டத்திற்கு மாறாகக் கல், மணல், கிறவல் போன்றன அகழப்படுவதுகுறைக் கப்பட்டிருக்கின்றது. இதேபோல் கழிவு அகற்றல் நடவடிக்கை சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கின்றது.

மேலும் பிரதான மாக யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகள், நாய்கள் போன்றவற்றின் தொல்லைகள் அதிகரித்திருக் கின்றன.

குறிப்பாக ஊர்காவற்றுறையில் மட்டும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இப்படி உள்ளன எனப் பொலிஸார் கூறியிருக் கின்றனர். அவற்றை பிரதேச செயலரின் ஒத்துழைப்புடன் பிடித்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் வீதி விளக்குகள் இல்லாமல்மக்கள்சிரமப்படுகின்றனர் எனவும் கூறினார்கள்.

அவ்வாறான வீதிகள் அடையாளம்காணப்பட்டுநடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பொலிஸ் நடமாடும் சேவைகள் சகல பொலிஸ் நிலையங்களுக்கு அருகிலும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை நடைபெறும். எனவே மக்கள் அங்கு சென்று முறைப்பாடுகளை வழங்கலாம், பிரச்சினைகளைத் தீர்த்து கொள்ளலாம். - என்றார். (உ)

## சத்தியலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க முதலமைச்சர் மறுத்துவிட்டார். அது குறித்து பின்னர் பேசிக் கொள்ளலாம் எனவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

மாகாண சுகாதார அமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோர் மீது விசாரணை நடத்தப்படும் என முதலமைச்சர் தெரிவித்தமையைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சைகளை அடுத்து சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் தமது இராஜினாமா கடிதத்தை முதலமைச்சரிடம் வழங்கினார். இதேவேளை மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் பதவி விலக மறுத்து தொடர்ந்தும் அமைச்சராக இருந்து வருகின்றார்.

இந்நிலையில் இரு அமைச்சர்களும் தங்களது அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிதிரும்பி செல்லுமாக இருந்தால் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனே முழுப் பொறுப்பாளி எனக் கூறியிருக்கின்றனர்.

இது தொர்பாக நேற்றுக் காலை முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இவ்விடயம் தொடர்பாகவும், அமைச்சர்கள் மாற்றம் எதற்காக இவ்வளவு காலம் இழுபறி நிலையில் இருக்கின்றது எனவும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கவே முதலமைச்சர் மறுத்திருந்தார்.

## துன்னாலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துன்னாலைப் பகுதியை அண்மித்த முள்ளிக்காட்டுப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தற்போது இடம்பெற்று வரும் குழப்ப நிலைக்கு காரணமான குழுவின் தலைவர் அவர்களின் ஒருவர் எனத் தெரிய வந்துள்ளதாம்.

அண்மையில், மணல் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டோர் எனச் கருதப்படுபவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டதுடன் பொலிஸ் காவலரண் அடித்து நொருக்கப்பட்டது.

மேலும் போக்குவரத்துக்கு இடையூறாக வீதிகளில் டயர்கள் கொளுத்தப்பட்டன. இச்சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில் 78 பேர் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்களில் 40 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். 38 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய 17 பேர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்தனர்.

கரைச்சி, கண்டாவளை பகுதியில் உள்ள தனியார் காணிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடையாளம் கண்டு உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலாளர்கள் ஊடாக முன்னெடுக்கவுள்ளன எனச் செயலர் தெரிவித்தார்.

## ஷிராந்தியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைக்காக பயன்படுத்தப்பட்டது என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காகவே அவரிடம் விசா ரணை இடம்பெற்றது.

ஷிராந்தி ராஜபக்ஷ நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குச் சென்றபோது மஹிந்த ராஜபக்ஷவும் அவருடன் கூடச் சென்றார். இந்நிலையில், ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நேற்று குற்றப் புலனாய்வு அலுவலகத்திற்கு முன்பாக மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஷிராந்தி ராஜபக்ஷ விசாரணை முடிந்து வெளியே வரும் வரை காத்திருந்த மக்கள் அவர் வெளியே வந்ததும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

இதனால், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷவை பாதுகாப்புடன் அனுப்பி வைத்தனர்.

இதேவேளை, தாயாரான ஷிராந்திநேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் வழங்கிய அதேநேரம் மூன்றாவது மகன் ரோஹித ராஜபக்ஷ நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். அவரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

சீனாவில் இருந்து இலங்கை சார்பாக 2012 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட செய்மதி தொடர்பாகவே அவரிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இதேசமயம், இரண்டாவது மகனான யோசித ராஜபக்ஷ இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

(இந்த விடயம் தொடர்பான மற்றொரு செய்தி 02 ஆம் பக்கத்தில்) (ம)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு எந்தவித நன்மையும் ஏற்படவில்லை எனவும் இந்த நிலை நீடித்தால் நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனவும் கருதியே இந்தப் போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எனவும் கூட்டு எதிரணி கூறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகியுள்ள போதிலும் இதுவரை நாட்டுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை.

சரியான தொலைநோக்கு இல்லாமல் கண்மூடித்தனமாக எடுக்கப்படும்தீர்மானங்களாலும், முன்னெடுக்கப்படும் திட்டங்களாலும் நாட்டின் பொருளாதாரம் முற்றாகச் சீர்குலைந்து போயுள்ளது. நீதியும் நியாயமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு அராஜகமும் அடக்குமுறைகளும் கோலோச்சி வருகின்றன.

அரசியல்வாதிகளும் அவர்களது அடிவருடிகளும் சுகபோகத்தில் திளைத்திருக்கும் போது பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தத்திணறிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சரிந்து போயுள்ள பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்த நாட்டுக்கு விமோசனம் ஏற்படவேண்டுமானால் இந்த அரசு தூக்கியெறியப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் முகமாகவே இந்த ஒருவார காலப் போராட்டம் நடைபெறவுள்ளது என கூட்டு எதிரணியினர் தெரிவித்துள்ளனர். (ம)

## டெனீஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடுகின்றது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் என். ஸ்ரீகாந்தா விடுத்துள்ள அறிக்கையில்கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

அமைச்சர்டெனீஸ்வரனுக்கு எதிராகஎமதுகட்சியினால்ஒழுங்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கும் நிலையில், அதனைச் சுமுகமாக தீர்த்துக் கொள்ள அவருக்குவழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை அவர் தவறவிட்டுள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற எமது கட்சியின்தலைமைக்குழுக்கூட்டத்தில், அவர் சமுகமளித்து முதலமைச்சருக்கு எதிரான தனது நடவடிக்கை தொடர்பில் விளக்கமளித்திருந்த சூழ்நிலையில், அமைச்சர் பதவியை அவர் தாமாகவே துறக்குமிடத்து, அவருக்கு எதிரான ஒழுங்கு நட வடிக்கை சுமுகமாக முடிவுக்கு கொண்டு வரப்படுமென அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அவர் பதவியை இராஜினாமா செய்வது பற்றி சிந்தித்து முடிவெடுப்பதற்காக ஒரு நாள் அவகாசமும் வழங்கப்பட்டது.

ஆயினும், அமைச்சர் டெனீஸ்வரன் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தை நிராகரித்து, அதனைச் செய்திருந்தார் மாறாகவே டிலும் தெரிவித்திருக்கின்றார்.

இந்நிலையில், மேலும் காலம் தாமதிக்காது, ஒழுங்கு நடவடிக்கையை விரைவாக மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் கட்சிக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில், கட்சியின் தலைமைக் குழுக் கூட்டத்தை எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் அமைச்சர் டெனீஸ்வரனுக்குஎதிரானஒழுங்கு நடவடிக்கை பற்றி தீர்க்கமான முடிவு எடுக்கப்படும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்தக் கூட்டத்துக்குபா.டெனீஸ்வரனும் அழைக்கப்பட்டிருக்கின்றார் எனத் தெரிய வந்தது.

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்.

அந்த இணைப்புக் குறிப்பில் மேற்படி காணி விடுவிப்புக்காக அந்த மக்கள் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாகப் போராடி வருகின்றமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"நல்லிணக்கம்ஏற்படுவதற்கு மிக முக்கிய விடயமான இந்தக் காணி விடுவிப்பு விவகாரம் குறித்த நிலைவரத்தை உங்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பது மிக முக்கியமானது என சம்பந்தன் கருதும் அதேசமயம், இந்த விடயத்தில் உங்களின் தலையீட்டையும் அவர் கோருகின்றார்." - என்றும் அந்தக் குறிப்பில் சம்பந்தனின் செயலாளர் தெரிவித்துள்ளார். (உ)

## ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசனத்துடன் சுட்டிக்காட்டினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன்.

இந்தியாவின் 70ஆவது சுதந்திரதினமான நேற்று அதனையொட்டி யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இரவு விருந்துபசார நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பக்கம் 03 »

# ரவி கருணாநாயக்க இராஜினாமா தொடர்பில் விசாரணைகளின் பின்னரே இறுதித் தீர்மானம்!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

நல்லாட்சி அரசு பதவிக்கு வந்த பின்னர் இரு அமைச்சர்கள்இராஜினாமாசெய்துள்ளனர். எம்மால் முடியுமான அளவிற்கு நல்லாட்சியை நாம் அமுல் படுத்தி வருகின்றோம். இதுவே நல்லாட்சிக்கான ஆரம்பமாகும். இனி தொடர்ந்து நேர்மையான பாதையில் பயணிக்கும்.

மேலும் ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா தொடர்பில் விசாரணைகள் முடிந்து முடிவு வந்த பின்னர் பரிசீலனை செய்து இறுதி தீர்மானத்தை அரசு எடுக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழா ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நவீன தொழில்நுட்பத்தின் வருகையின் ஊடாக உலகில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொலைபேசி, இணையத்தளம் ஆகியவற்றின் வருகையின் காரணமாக சட்டம், மருத்துவத் துறை உள்ளிட்ட பலதும் மாற்றம் கண்டுள்ளன. ஆகவே, இந்த மாற்றத்தை அடிப்படையாக கொண்டு எமது பயணம் அமைய வேண்டும்.

கடந்த 2015 ஆம் ஆண்டு புரட்சி செய்தோம். இந்த ஆட்சியின் வெற்றியின் பயனாக கடன் சுமையை நீக்கி புதிய யுகத்தை உருவாக்க வேண்டும். நல்லாட்சி அரசு அமுல்படுத்தும் காரியங்களையும் புதிய யுகத்தை ஏற்படுத்துவதற்கானசமூகமாற்று வேலைத் திட்டங்களையும்இருவருடங்களில் செய்து விட முடியாது. அவசரமாக தீர்மானங்கள் எடுத்து விடவும் முடியாது.

எனினும் எமது பயணம் வேகம் குறைவாக இருந்த போதிலும் நல்லாட்சி விழுமியங்களைக் கட்டியெழுப்புவதற்கும் அதனை அமுல் படுத்துவதற்குமான பிரதான அத்திபாரத்தை இட்டு செயலாற்றி வருகின்றோம்.

அரசியல்வாதிகள் என்ற வகையில் குற்றம் இழைத்தமை உறுதியானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது பொதுவான ஜனநாயகப் பண்பாகும்.

அதுமாத்திரமன்றி, உலகின் வழமையான நடவடிக்கையாகவும் கருத முடியும். எனினும் குற்றச்சாட்டு இருக்கும் போது எவரும் அதிகாரத்தை விடுவதற்கு முனைவது குறைவாகும். முன்னைய ஆட்சியின் போது இவ்வாறான நடவடிக்கைகள் எதனையும் நாட்டு மக்கள் கண்டுக்கொள்ளவில்லை.

என்றாலும் குற்றச்சாட்டு மாத்திரம் முன்வைக்கப்பட்ட தருவாயில் இராஜினாமா செய்யும் வழிமுறையை நல்லாட்சி



யிலேயே அறிமுகம் செய்து வைத்துள்ளோம். நல்லாட்சி வந்த பின்னர் இரு அமைச்சர்கள்இராஜினாமாசெய்துள்ளனர். இது பெரிய முன்னேற்றம். எனவே எம்மால் முடிந்த அளவிற்கு நல்லாட்சியை அமுல் படுத்தியுள்ளோம்.

இதன்படி, தற்போது குற்றச்சாட்டுகள் மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளன. குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை நிறைவடைந்த பின்னர் - இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான பூர்த்தியான முடிவு வந்த பின்னர் - பரிசீலனை செய்து இறுதித் தீர்மானம் எடுப்போம்.

நல்லாட்சியையும்சிறப்பான யுகமொன்றையும் ஐந்து வருடங்களில் ஏற்படுத்த இயலாது.

ஐந்து வருட காலப்பகுதிக்குள் ஆரம்ப அடித்தளத்தை இட முடியும். முழுமையாக அமுல் படுத்த வேண்டுமாயின் பத்துவருடங்கள்தேவையாகும். ஆகையால் ஐந்து வருடம் முடிந்த பின்னர் எமது ஆட்சி நீடிக்க வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# பங்களாதேஷ் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக் குழுவினர் இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்கவுடன் சந்திப்பு!



கொழும்பு, ஓக. 16

பங்களாதேஷ் தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் குழுவினர்கள்இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்கவை சந்தித்தனர்.

இராணுவதலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.


இக்குழுவின் தலைவராக மேஜர் ஜெனரல் எஸ்.எம் சவூயிடீன் அகமட், பிரிகேடியர் ஜெனரல் அபு தகர் முகமட் இப்ராகிம் சிரேஷ்ட பணிப்பாளராகவும், பிரிகேடியர் ஜெனரல் பைசிட் சர்வர் கொமடோர் எஸ் அஸ்லாம் பாவஷ் ஆகியோர் இராணுவ தளபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் குழுவினர்களுக்கு இராணுவத் தளபதியினால் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்தக் குழுவில் பங்களாதேஷை சேர்ந்த 21 இராணுவத்தினரும், 2 கடற்படையினரும், ஒரு விமானப்படை அங்கத்தவரும் 5 சிவில் பாதுகாப்பு , மீளாய்வு மற்றும் பீடத்தின் வெளிநாட்டு மாணவர்களும் கலந்துகொண்டனர்.

சந்திப்பில் இராணுவ செயலாளர் மேஜர் ஜெனரல் பிரியந்த ஜயசுந்தர, இராணுவ பயிற்சி பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜி.வி ரவிபிரிய ஆகியோரும் கலந்துகொண்டனர். (க)

# புதிய பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு நல்லூரில் இடம்பெற்றது!



யாழ்ப்பாணம், ஓக. 16

வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட புதிய பொதுச்சேவைகள்ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வு நல்லூரில் இடம்பெற்றுள்ளது.

இந்த அமர்வு நேற்று முற்பகல் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள பொதுச்சேவைகள்ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி நிசாந்த அல்விஸ், பொதுச்சேவைகள்ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஸ், பிரதம செயலாளர் மற்றும் அலுவலகத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

மௌன அஞ்சலியுடன், ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சேவைகள்ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஸ் உரையாற்றினார்.

வடமாகாணத்தில் அதிகாரிகளின் திறன்களை அதிகரிக்கச் செய்வதற்குப் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டைத் தாம் மிகவும் எதிர்பார்க்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரும், முன்னாள் அரசாங்க அதிபருமான எஸ். பத்மநாதன் உரையாற்றினார்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழு அரசியல் கலப்பற்றதாக இருக்கும் ஓர் அமைப்பு எனவும், எதிர்காலத்தில் வடமாகாணத்தின் நிர்வாக மட்டத்தில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு ஆணைக்குழு விரைவான நடவடிக்கைகளை பாரபட்சம் இன்றி மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், பொதுச் சேவைகள் ஆணைக்குழு முறைப்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான பரிந்துரைகளைக் காலம் தாழ்த்தாது முடிவுறுத்த வேண்டும் என்ற ஆளுநரின் கோரிக்கைக்கு ஏற்ப நாம் செயற்படுகின்றமை அவசியம் எனவும் அவர் கூறி யுள்ளார். (க)

# நாட்டில் கழிவுகளை அகற்றல் தொடர்பில் அடுத்த வருடத்தில் நிலையான தீர்வு!

## நேற்றைய கலந்துரையாடலில் மைத்திரி

நாட்டில் கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு அடுத்த வருடத்தில் நிலையான தீர்வொன்றை வழங்குவதே அரசின் நோக்கமாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் 09 மாகாணங்களிலும் கழிவு முகாமைத்துவத்துக்கான உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி நிறைவுசெய்யப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை முறைமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கழிவுகளை வெளியேற்றும் செயற்பாடுகளின் தற்போதைய முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது அதிகாரிகளிடம் விசாரித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்பு தேசிய செயற்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குடிசை வீடுகள் காணப்படும் பிரதேசங்களில் கழிவு முகாமைத்துவம் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பொதுமக்களை அறிவூட்டும் பிரசாரநடவடிக்கைகளைமேலும் விருத்தி செய்தல் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)





நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வவுனியா - வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து வருடாந்தம் நல்லூர் நோக்கி நடைபெறும் பாதயாத்திரை நடைபவனி நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆலய தர்மகர்த்தா கு. ஜெயராணி அம்மா தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் தமிழருவி த.சிவகுமாரன், வவு னியா மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தாட்சாயணி ஆகியோர் பங்குபற்றி உரையாற்று கின்றமையையும் ஆரம்பமான பாத யாத்திரைப் பவனி யையும் படங்களில் காணலாம். (ம)

# கடும் மழைக்கு மத்தியிலும் மடு அன்னைக்கு திருவிழா









மன்னார் மடுத் திருப்பதியின் வருடாந்த திருவிழா நேற்று பல்லாயிரக் கணக்கான பக்தர்களுடன் நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த பக்தர்கள் இதில் பங்கேற்றனர். மடு அன்னையின் திருவிழாவுக்காக நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்த சுமார் நான்கு இலட்சம் வரையான மக்கள் ஆலயத்தில் தங்கி யிருந்தனர். கடந்த சில தினங்களாக அங்கு பெய்த மழையால் அவர்கள் பாதிப்பை எதிர்நோக்கினர்.


நேற்று முன்தினம் அங்கு கொட்டித் தீர்த்த கன மழையால் அந்த மக்கள் நிர்க்கதி ஆகினர். இந்த அனர்த்தத்தின் மத்தியில் இந்த வருட திருவிழாவை இடைநிறுத்துவதாக ஆலய நிர்வாகம் அறிவித்ததுடன் மக்களை வெளியேற்றும் பணியிலும் ஈடுபட்டது.

இந்நிலையில், நேற்று அப்பகுதியில் ஓரளவு சுமுக நிலை ஏற்பட்டதால் திருவிழா ஓரளவு வழமைபோல இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் இத்திருவிழா நடைபெற்றது. (ம-112)





யாழ். மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவின் 25ஆவது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா நேற்றுக் காலை யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் யாழ். விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றமையையும், 'நல்லைக்குமரன்' மலரை பதிப்பாசிரியர் ந.விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக்கொள்கின்றமையையும் படங்களில் காணலாம்.






நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நேற்று மாலை கார்த்திகைத் திருவிழா இடம்பெற்றது. இதன்போது அலங்கரிக்கப்பட்ட முருகப்பெருமான் வீதி வலம் வருவதை படங்களில் காணலாம். (ம)



நல்லூர் உற்சவ காலத்தில், கந்தப் பெருமான் திருவீதி உலா வரும்போது யாழ். சின்மயா மிஷன் ஏற்பாட்டில் பஜனை நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இதன்போது சின்மயா மிஷன் வடமாகாண வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகளின் வழிநடத்தலில் மாணவர்கள் கலந்துகொண்ட பஜனை நிகழ்வு ஒன்றைப் படத்தில் காணலாம். (ம)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.